Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk
தமிழ் Mirror
www.tamilmirror.lk
FRIDAY, SEPTEMBER 27 2024
வெள்ளிக்கிழமை செப்டெம்பர் 27, 2024 | ஒளி: 10 கதிர் 060 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE



## முட்டை இறக்குமதி நிறுத்தம்

முழுச் செய்தி P2

### இஸ்லாத்தை அவமதித்தமைக்கு எதிரான வழக்கு

# நவம்பர் 14 தீர்ப்பு



பொதுபல சேனா அமைப்பின் தலைவர் கலபத்த அத்தே ஞானசார தேரர் இஸ்லாத்தை அவமதித்ததாக கூறி அவருக்கு எதிராக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பை நவம்பர் 14ஆம் திகதி வழங்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன வியாழக்கிழமை (26) உத்தரவிட்டுள்ளார்.

முறைப்பாட்டில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கான ஆதாரங்கள் முன்வைக்கப்படாத நிலையில், குற்றம்சாட்டப்பட்டவரை விடுதலை செய்யுமாறு சிரேஷ்ட சட்டத்தரணி காமினி அல்விஸ் நீதிமன்றில் கோரினார். 2016 ஜூலை 8, அன்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது, இஸ்லாம் தொடர்பான அறிக்கை மத நல்லிணக்கத்தை மீறுவதாகவும், அதன்படி, குற்றவியல் சட்டத்தின் 291 (பி) பிரிவின் கீழ் தண்டனைக்குரிய குற்றம் இழைக்கப்பட்டதாகவும் குற்றம் சாட்டி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு விசாரணைக்காக கொழும்பு குற்றப்பிரிவு அதிகாரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகினர் இரு தரப்பினரின் வாதங்களையும் பரிசீலித்த நீதவான், நவம்பர் 14ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்படும் என்று உத்தரவிட்டார்.



## மானியம் அதிகரிப்பு

2024/25 பெரும்போகத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் உர நிவாரணத்தை ஒக்டோபர் 01 முதல் ஹெக்டயாருக்கு 15,000 ரூபாவில் இருந்து 25,000 ரூபாய் வரை அதிகரிக்குமாறு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க திறைசேரிக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.



## எரிபொருள் கையிருப்பில் உள்ளது

இந்த நாட்டில் நுகர்வுக்கு போதுமான எரிபொருள் கையிருப்பு உள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் அதிகாரிகள், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு அறிவித்தனர்.

மக்களுக்குத் தடையின்றி எரிபொருளை வழங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் வினைத்திறனுடன் முன்னெடுப்பதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, அடுத்த வருடத்திற்குத் தேவையான எரிபொருளைப் பெற்றுக்கொள்வதில் கவனம் செலுத்துமாறு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார். இந்த செயற்பாடுகளுக்கு ஜனாதிபதி என்ற வகையில் தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2



## கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சி

### இன்று ஆரம்பம்: ஒக் 06 நிறைவு

கொழும்பு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வெள்ளிக்கிழமை (27) காலை 9.00 மணிக்கு சர்வதேச புத்தகக் கண்காட்சி ஆரம்பமாகவுள்ளது. ஒக்டோபர் (06) வரை 11 நாட்கள் நடைபெற உள்ளது.

இலங்கை புத்தகப் பதிப்பாளர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக்கண்காட்சி 25ஆவது தடவையாக நடைபெறுகின்றது.

“புத்தகக் கண்காட்சியை சங்கத்தின் முன்னாள் தலைவர்கள் திறந்து வைக்கும் வகையில், இந்தக் கண்காட்சிக்காக சுமார் 400 கூடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

மேலும், புத்தகக் கண்காட்சியைத் தவிர, புத்தகங்கள் வெளியிடப்படுவதுடன், இந்த விழாக்கள், கலாசார, பாடல் கச்சேரிகளும் நடைபெறும்”. என இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்தின் தலைவர் சமந்தா இந்திவேரா தெரிவித்தார்.


இந்த புத்தகக் கண்காட்சியின் 25 ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு கண்காட்சி மற்றும் புத்தகப் பதிப்பாளர் சங்கத்தின் வரலாறு புத்தகமாக வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தலைவர் தெரிவித்தார்.



## தியாக தீபம் திலீபனின் 37ஆவது நினைவு தினம்

ஈழத் தமிழ் மக்களுக்காக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 37வது நினைவு தினம், யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் வியாழக்கிழமை (26) அனுஷ்டிக்கப்பட்டது.

– நிதர்ஷன் வினோத்



## திலித் + திலும்

தொழிலதிபர் திலித் ஜயவீர தலைமையிலான மௌபிம ஜனதா கட்சியின் தேசிய அமைப்பாளராக முன்னாள் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம வியாழக்கிழமை (26) நியமிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## ‘குஷ்’ஷுடன் பிரித்தானிய பிரஜை கைது



உள்ளூர் பெறுமதியின் பிரகாரம் 43 கோடி 64 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் பெறுமதியான குஷ் போதைப்பொருளுடன் 21 வயதான பிரித்தானியப் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளால் வியாழக்கிழமை (26) காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் தாய்லாந்தின் பேங்கொக் நகரத்திலிருந்து வியாழக்கிழமை (26) காலை 09.35 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

தொடர்ச்சி P2

## விபத்தில் இளம் தம்பதி பலி

### பெண் கர்ப்பிணி



அக்குரஸ்ஸ சியம்பலாகொட - பிடபெத்தர வீதியில் போபகொட சந்திக்கு அருகில் புதன்கிழமை (26) மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் பாடசாலை ஆசிரியை ஒருவரும் அவரது கணவரும் உயிரிழந்துள்ளனர் என அக்குரஸ்ஸ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## இலஞ்சம் வாங்கிய புலனாய்வு பிரிவினருக்கு விளக்கமறியல்

**கனகராசா சரவணன்**

மட்டக்களப்பு- கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் மணல் வியாபாரி ஒருவரிடம் இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் இலஞ்ச-அல்லது- ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட விசேட புலனாய்வு பிரிவைச் சேர்ந்த இரண்டு பேரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் வியாழக்கிழமை (26) உத்தரவிட்டார்.

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவில் கடமையாற்றிவரும் விசேட புலனாய்வு பிரிவைச் சேர்ந்த இருவர், மணல் வியாபாரி ஒருவரிடம் நீண்ட நாட்களாக இலஞ்சமாகப் பணம் வாங்கிவந்துள்ள நிலையில் குறித்த மண்வியாபாரி இது தொடர்பாக கொழும்பு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் ஆலோசனைக்கு அமைய சம்பவ தினமான புதன்கிழமை (25) பிற்பகல் கொக்கட்டிச்சோலை நகர்ப்பகுதியில் உள்ள வீதியில், மாறுவேடத்தில் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதன்போது, அவ்விருவரும், மண் வியாபாரியிடம் இலஞ்சமாக 2 ஆயிரம் ரூபாவை வாங்கும் போது கைது செய்து, நீதிமன்றத்தில், வியாழக்கிழமை (26) முன்னிறுத்தினர்.

PAGE 1 தொடர்ச்சிகள்

# திலித் + திலும்

கொழும்பில் உள்ள மவ்பிம ஜனதா கட்சி அலுவலகத்தில் திலித் ஜயவீரவிடமிருந்து நியமனக் கடிதத்தை திலும் அமுனுகம பெற்றுக்கொண்டார்.

2020 பொதுத் தேர்தலில் கண்டி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியதிலும் அமுனுகம ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மிகவும் பிரபலமான உறுப்பினராகவும் இருந்தார். திலும் அமுனுகம அங்கு 171,758 விருப்பு வாக்குகளைப் பெற்றார். அண்மையில் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளித்த பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர் திலும் அமுனுகம.

மௌபிம ஜனதா கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியை திலும் அமுனுகம ஏற்றுக்கொண்டமை அக்கட்சிக்கு முக்கியமானதொரு மைல்கல் என மௌபிம ஜனதா கட்சியின் தலைவரும் தொழிலதிபருமான திலித் ஜயவீர தெரிவித்தார்.

# ‘குஷ்’ஷுடன் பிரித்தானிய பிரஜை கைது

பின்னர், சந்தேக நபர் விமான நிலையத்தின் அனைத்து சோதனை நடவடிக்கைகளையும் முடித்துவிட்டு பச்சை வழித்தடம் (Green Channel) வழியாக விமான நிலையத்தை விட்டு வெளியேற முயன்ற போது மீண்டும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இதன்போது, சந்தேக நபர் கொண்டு வந்த பயணப் பொதிகளிலிருந்து 43 கிலோ 648 கிராம் குஷ் போதைப்பொருள் இருந்தமை கண்டறிக்கப்பட்டது கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# போதுமான எரிபொருள் கையிருப்பில் உள்ளது

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் அதிகாரிகளுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் வியாழக்கிழமை (26) நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்ட ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க இதனைக் குறிப்பிட்டார்.

இந்திய உதவித்திட்டத்தின் கீழ் மின்சக்தி அமைச்சிற்குக் கிடைத்துள்ள சூரிய சக்தி பெனல்களை விரைவில் பிரிவெனாக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்த ஜனாதிபதி, சூரிய சக்தி பெனல்களை வழங்குவதற்கான திட்டமொன்றைத் தயாரிப்பதன் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் வெளிநாடுகளில் இருந்து பெறப்படும் கடனுதவிகளின் அடிப்படையில் செயல்படுத்தப்படும் திட்டங்களைத் துரிதப்படுத்துவதன் அவசியத்தைத் தெளிவுபடுத்திய ஜனாதிபதி, வெளிநாட்டு உதவியின் கீழ் செயற்படுத்தப்படும் திட்டங்களுக்கு மூன்று மாதங்களுக்குள் ஒப்புதல் வழங்க ஒரு குழுவை நியமிக்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். இதன் மூலம் வெளிநாட்டு உதவியின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் திட்டங்களை விரைவுபடுத்த முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கிராமிய அபிவிருத்தித் திட்டங்களை விரைவுபடுத்தி கிராமத்திற்குப் பணம் கிடைக்கும் வகையிலான முறைமையொன்றை ஏற்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, இதன் ஊடாக பொருளாதாரத்தை விரைவாகப் பலப்படுத்த முடியும் என்றும் தெரிவித்தார். இந்தச் செயற்பாடுகளில் அதிகாரிகளுக்கு பெரும் பங்கு இருப்பதாகவும் அதற்கு அதிகாரிகளின் அர்ப்பணிப்பு மிகவும் அத்தியாவசியமானது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, வலுசக்தி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் உதயங்க ஹேமபால உள்ளிட்ட அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

# விபத்தில் இளம் தம்பதி பலி

பிடபெத்தரை, மெதிரிபிட்டிய பாடசாலையில் கிடைத்த பரிசில்களுடன் மோட்டார் சைக்கிளில் மகதுரையில் உள்ள தமது வீட்டை நோக்கி கணவருடன் பயணித்துள்ளனர்.

பிடபெத்தரவை சேர்ந்த வர்த்தகர் ஒருவர் தனது சொகுசு வேனில் அக்குரஸ்ஸ பகுதியிலிருந்து பிடபெத்தரை நோக்கிப் பயணித்த போது, வேனை கவிழ்த்து அருகில் உள்ள மண்ணில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

உயிரிழந்தவர்கள் மகடூர பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதான பாக்யா பொரலஸ்ஸ மற்றும் அவரது கணவர் இந்திக்க சம்பத் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகத்திற்குரிய வர்த்தக சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளதுடன், அவர் மதுபோதையில் இருந்தாரா என்பதைக் கண்டறிய விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பாக்யாவின் சடலம் அக்குரஸ்ஸ வைத்தியசாலைக்கும், இந்திகவின் சடலம் கராப்பிட்டிய வைத்தியசாலைக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

மேலும் உயிரிழந்த பாக்யா கர்ப்பமாக இருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# யாழில் பொறுப்பதிகாரி கைது

■ நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணத்தில் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரைத் தவறான முறைக்கு உட்படுத்த முயற்சி செய்த பொலிஸ் பொறுப்பதிகாரி மீது விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை பொலிஸ் விசேட பிரிவின் பொறுப்பதிகாரி, அங்கு கடமை புரியும், 25 வயது மதிக்கத்தக்க பொலிஸ் உத்தியோகத்தரையே இவ்வாறு தவறான முறைக்கு உட்படுத்த முயற்சி செய்துள்ளார்.

காங்கேசன்துறை விசேட பொலிஸ் பிரிவில் கடமை புரியும் பொலிஸ் உத்தியோகத்தர்களை, அவர்களது பொறுப்பதிகாரி, சேந்தாங்குளம் கடற்கரைக்கு கடந்த ஜூன் 8ஆம் திகதி, அழைத்துச் சென்று, அங்கு பொது நபர்கள் சிலருடன் இணைந்து மதுபான விருந்தில் ஈடுபட்டுள்ளார். அதன்பின்னர், மதுபோதையில் இருந்த குறித்த பொறுப்பதிகாரியை பொலிஸ் உத்தியோகத்தர் அழைத்துச் சென்று மல்லாகம் பகுதியில் உள்ள விடுதி அறையில் தங்க வைத்து விட்டு வெளியே வர முயற்சித்துள்ளார். இதன்போது, பொறுப்பதிகாரி அறையைப் பூட்டிவிட்டுக் குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை தவறான முறைக்கு உட்படுத்த முயற்சி செய்துள்ளார்.

இதனால், கோபமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் அவரை தாக்கிவிட்டு வெளியே வந்துள்ளார். இந்த விடயத்தினை அந்த பொலிஸ் உத்தியோகத்தர், சக உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தியவேளை, சக உத்தியோகத்தர் ஒருவர் அந்த பிரச்சினையை, பொலிஸ் விசேட பிரிவினர் முறைப்பாடுகள் செய்யும் புத்தகத்தில் பதிவு செய்துள்ளனர்.

இதனால், பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு எதிராக வடக்கு மாகாணத்திற்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. இருப்பினும் அந்த விசாரணை முறையாக நடைபெறாமல், பொறுப்பதிகாரியை பாதுகாக்கும் நடவடிக்கைகள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வேலையிலிருந்து விலகல் விசாரணை என கூறி குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை காலை 8 மணிக்கு அழைப்பதாகவும், அந்த பொலிஸ் உத்தியோகத்தர் யாழ்ப்பாணத்தில் இருந்து அங்குச் செல்வதற்குச் சற்று தாமதமாகினால், விசாரணைகளை மேற்கொள்ளாமல் திருப்பி அனுப்பி இழுத்தடிப்பு செய்வதாகவும் தெரியவருகின்றது.

அத்துடன், குறித்த விடயத்தைப் பதிவு புத்தகத்தில் எழுதிய பொலிஸ் உத்தியோகத்தரும், பாதிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரும், பொறுப்பதிகாரியால் பழிவாங்கலுக்கு உட்படுத்தப்பட்டு நெருக்கடிகளுக்கு உள்ளாகி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர், தான் வேலையிலிருந்து விலகுவதாக வியாழக்கிழமை (26) எழுதிவிட்டுச் சென்றுள்ளார் என அறியமுடிகிறது.

# முட்டை இறக்குமதி...

உள்நாட்டு முட்டை விலை குறைந்ததால் இந்தியாவில் இருந்து முட்டை இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

உள்ளூர் முட்டை விலை 55 மற்றும் 65 ரூபாவாக அதிகரித்ததன் காரணமாக, மானிய விலையில் மக்களுக்கு முட்டை வழங்குவதற்காக, இந்தியாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு கடந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது.

அறிக்கையின்படி, மாதத்திற்கு 3 மில்லியன் முட்டைகளை இறக்குமதி செய்வதற்குத் தேவையான கொள்முதல் நடவடிக்கைகள் கூட நிறைவடைந்துள்ளன.

# 3 வினாக்கள் கசிவு; இருவரிடம் விசாரணை

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோர் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு வியாழக்கிழமை (26) அழைக்கப்பட்டிருந்தனர்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் வினாத்தாள் கசிந்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. பரீட்சை தொடர்பில் தமது ஆணைக்குழுவிற்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக மனித உரிமைகள் ஆணையாளர், சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

அதன் காரணமாகப் பரீட்சைகள் ஆணையாளர் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டுள்ளதாக அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

# எண்பது குழுக்கள் இரத்து

இதுவரை பாராளுமன்றத்தில் செயற்பட்டு வந்த COP, COPA உட்பட ஏறக்குறைய எண்பது குழுக்கள் செவ்வாய்க்கிழமை (24) பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் மூலம் இரத்துச் செய்யப்பட்டன.

எவ்வாறாயினும், பாராளுமன்றம் கலைக்கப்பட்டாலும் அரசியலமைப்பு பேரவை மாத்திரம் ஒழிக்கப்படாது என பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரசியலமைப்புச் சட்டத்தின்படி, சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பிற கட்சிகள் மற்றும் அரசியலமைப்பு பேரவையில் அங்கம் வகிக்கும் எதிர்க்கட்சி எம்.பிக்கள் அடுத்த சட்டசபை அமைக்கப்படும் வரை உறுப்பினர்களாக மட்டுமே இருக்க வேண்டும்.

அரசியலமைப்பு சபையில் ஜனாதிபதியின் பிரதிநிதியாக முன்னாள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா செயற்பட்டார்.

அந்த சபையில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் பிரதிநிதியாக அமைச்சர் விஜித ஹேரத் நேற்று (24) முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் சட்டமாக மாறாத அனைத்து சட்டமூலங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் பிரேரணைகள் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் மூலம் இல்லாதொழிக்கப்படும் என பாராளுமன்ற அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் மூலம், சபாநாயகர், பிரதி சபாநாயகர், பிரதிநிதிகள் குழுத் தலைவர், சபைத் தலைவர், ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர், எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் ஆகிய பதவிகள் இரத்துச் செய்யப்பட்டன.

# குருசாமி இராஜினாமா: மனோவுக்கு கடிதம்



முருகேசு பரணிதரன்

ஜனநாயக மக்கள் முன்னணியின் பொது செயலாளர் பதவியில் இருந்த கே.ரி.குருசாமி, கட்சி தலைவர் மனோ கணேசனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தான் கட்சி மற்றும் கூட்டணி பதவிகளில் இருந்து சுயவிருப்புடன் ராஜினாமா செய்வதாக தெரிவித்துள்ளார்.

இதையடுத்து கொழும்பில்தலைவர்மனோ கணேசன் தலைமையில் கூடிய ஜனநாயக மக்கள் முன்னணியின் அரசியல் குழு வியாழக்கிழமை (26), இந்த ராஜினாமாவை ஏற்றுக்கொண்டு, வெற்றிடமான பொது செயலாளர் பதவிக்கு முருகேசு பரணிதரனை ஏகமனதாக நியமித்தது.

முருகேசு பரணிதரன் கட்சியின் கேகாலை மாவட்ட அமைப்பாளர் மற்றும் பிரச்சார செயலாளர் ஆகிய பதவிகளை வகிக்கும் அதேவேளை ஜனநாயக மக்கள் முன்னணியினதும், தமிழ் முற்போக்கு கூட்டணியினதும் அரசியல் குழு உறுப்பினராகவும் பதவி வகின்றார்.

மேலும் அரசியல் குழுவில், எதிர்வரும் பாராளுமன்ற தேர்தல் தொடர்பில், ஞாயிற்றுகிழமை 29ம் திகதி கொழும்பில் நடைபெற உள்ள தமிழ் முற்போக்கு கூட்டணி அரசியல் குழுவில் கலந்து பேசி அங்கே எடுக்கப்படும் முடிவுகளுக்கு அமைய செயற்படுவது எனவும் தீர்மானிக்கபட்டது.

# “இலங்கை மக்கள் புதிய வரலாற்றை எழுதியுள்ளனர்”

இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான நெருக்கமான ஒத்துழைப்புகள் இலங்கை இறைமை கௌரவம் பாதுகாப்பு அபிவிருத்தி ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கு உதவும் என இலங்கைக்கான சீன தூதுவர் குய் சென் ஹாங் தெரிவித்துள்ளார்.

சீன மக்கள் குடியரசு ஸ்தாபிக்கப்பட்டு 75 வருடங்களாகியுள்ளதைக் குறிக்கும் நிகழ்வு கொழும்பில் இடம்பெற்றவேளை அந்த நிகழ்வில் சீன தூதுவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளிற்கும் இடையிலான நெருக்கமான ஆழமான ஒத்துழைப்பு காணப்பட்டால் இலங்கையால் தனது இறைமை கௌரவம் பாதுகாப்பு அபிவிருத்தி ஆகியவற்றை அதிகளவிற்குப் பாதுகாக்க முடியும் என்பதையும், இலங்கையால் பிராந்திய சர்வதேச விவகாரங்களில் மேலும் அதிகளவு பங்களிப்பு செய்ய முடியும் என்பதையும் இடம்பெற்றுள்ள சம்பவங்கள் வெளிப்படுத்துகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் ஆற்றியுள்ள முதலாவது உரையில் சீன தூதுவர் இலங்கை மக்கள் புதிய சகாப்தத்தில் நுழைந்துள்ளனர். அநுர குமார திசாநாயக்கவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்ததன் மூலம் புதிய வரலாற்றை எழுதுகின்றனர் என குறிப்பிட்டுள்ளார்.

சீனா மற்றும் பிற நட்புநாடுகளின் ஆதரவு உதவியுடனும் ஜனாதிபதியின் வலுவான தலைமைத்துவம் இலங்கையின் விடாமுயற்சி புத்திசாலித்தனம் வீரம் நிறைந்த மக்கள் மூலமும் இலங்கை நிச்சயமாக அனைத்து ஆபத்துகளையும் சவால்களையும் வெற்றிகொள்ளும் என கருதுவதாக சீன தூதுவர் தெரிவித்துள்ளார்.





## பல்கலைக்கழகங்களில் பகிடிவதையை தவிர்ப்பதற்கு

# வழிகாட்டுதல் தொகுப்பு

அரச பல்கலைக்கழகங்களில் நிகழும் பகிடிவதை சம்பவங்களை தவிர்ப்பதற்கு வழிகாட்டுதல் தொகுப்பொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்றத்திற்கு சட்ட மா அதிபர் அறிவித்துள்ளார்.

அரச பல்கலைக்கழகங்களில் பகிடிவதை சம்பவங்களை ஒழிப்பதற்கான வழிகாட்டுதல்களைத் தயாரிப்பதற்கான உத்தரவு ஒன்றை வெளியிடுமாறு கோரி, 2020ஆம் ஆண்டு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பகிடிவதை சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மாணவர் சமர்ப்பித்த அடிப்படை உரிமை மனுவொன்று, ஜயந்த ஜயசூரிய, ஷிரான் குணரத்ன மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கலாநிதி அவந்தி பெரேரா, அரச பல்கலைக்கழகங்களில் நிகழும் பகிடிவதை சம்பவங்களைத் தடுப்பதற்காக வழிகாட்டுதல் தொகுப்பொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

இதன்போது, வழிகாட்டுதல் தொகுப்பினை அனைத்து பல்கலைக்கழகங்களுக்கும் அனுப்பி, ஏதேனும் திருத்தங்கள் முன்மொழியப்பட்டால், அவற்றைப் பெற்று இறுதி வரைவைத் தயாரிக்க வேண்டும் என்றும் தலைமை நீதிபதி குறிப்பிட்டார்.

இறுதி வரைவைத் தயாரித்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவும் தலைமை நீதியரசர் உத்தரவிட்டுள்ளார்.



# தியாகி தீலீபனின் நினைவு தினம்

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாகி திலீபனின் 37ஆவது நினைவு தினம் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் அனுஷ்டிக்கப்பட்டது.
குறித்த நிகழ்வானது, வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக அமைந்துள்ள கொட்டகையில் இடம்பெற்றுள்ளது. இதன்போது திலீபனின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி, ஈகைசுடர் ஏற்றி அஞ்சலி நிகழ்த்தப்பட்டது.
நிகழ்வில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் கலந்து கொண்டுள்ளனர்.

– க.அகரன்

# அராலி விபத்தில் முதியவர் காயம்

■ பு.கஜிந்தன்



வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி பாலத்தடியில் வியாழக்கிழமை(26) காலை இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த முதியவர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


காரைநகர் - யாழ்ப்பாணம் இடையே சேவையில் ஈடுபடும் அரச பேருந்தும், தனியார் பேருந்தும் போட்டி போட்டுக் கொண்டு வந்த நிலையில், அராலி அம்மன் கோவில் பகுதியில் இருந்து வந்து பிரதான வீதிக்கு நுழைந்த மோட்டார் சைக்கிள் மீது அரச பேருந்து மோதியுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த முதியவர் படுகாயமடைந்துள்ளதுடன், அங்கிருந்தவர்கள் அவரை மீட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வாகன விபத்தில் சாரதி மரணம்

■ செ.திவாகரன்



நுவரெலியா-பதுளை பிரதான வீதியிலுள்ள மதுர கணபதி ஆலயத்திற்கு அருகாமையில் புதன்கிழமை (25) மாலை இடம்பெற்ற விபத்தில் சாரதி ஒருவர் மரணமடைந்துள்ளார்.

முச்சக்கரவண்டியும் லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் படுகாயமடைந்த முச்சக்கரவண்டி சாரதி நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் வியாழக்கிழமை (26) காலை உயிரிழந்துள்ளார்.

நுவரெலியா, கலுகெல பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

லொறியின் சாரதி கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்துள்ளானர்.



# கடமை பொறுப்பேற்பு

கிழக்கு மாகாண ஆளுநராக ஜயந்த லால் ரத்னசேகர, திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் வியாழக்கிழமை (26) அன்று தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்டார்.

# புதிய செயலாளர் கடமையேற்பு



கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணம் அமைச்சின் புதிய செயலாளர் ஏ.எம்.பி.எம்.பீ.அத்தபத்து பத்தரமுல்லை, செத்சிறிபாயவிலுள்ள தனது அலுவலகத்தில் புதன்கிழமை (25) அன்று பதவியை பொறுப்பேற்றுக் கொண்டார்.

திறைசேரியின் வெவ்வேறு பிரிவுகளில் 26 வருட காலத்துக்கு அதிகமான சேவை அனுபவம் உடைய இவர் இதற்கு முன்னர் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேல்திகாரியாகவும் கடமையாற்றி இருக்கின்றார். அத்துடன், அவர் வியாபார மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும் கடமையாற்றி உள்ளமை குறிப்பிடத்தக்கது.




# ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸுக்கு அங்கீகாரம்

■ டி.கே.ஜி.கபில

தெற்காசியாவின் முன்னணி விமானச் சேவையாக ‘ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்’ அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தெற்காசியச் சுற்றுலா சேவை விருது விழாவின் போதே இந்த அங்கீகாரம் கிடைத்துள்ளது.

வருடாந்தம் நடைபெறும் இந்த விருது வழங்கும் விழா தெற்காசியப் பிராந்தியத்தில் சுற்றுலா சேவைத் துறையில் மிகவும் மதிக்கப்படும் விருது விழாவாகும்.

இம்முறை நேபாளம், காத்மாண்டுவில் வெள்ளிக்கிழமை (20) அன்று நடைபெற்றது.

தொழில் வல்லுநர்கள் மற்றும் நுகர்வோர் அளித்த வாக்குகளின் அடிப்படையிலேயே குறித்த விருது விழாவிற்கான தேர்வுகள் நடைபெற்றுள்ளது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தெற்காசியப் பிராந்தியத்தில் உள்ள இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் நேபாளம் போன்ற நாடுகளில் உள்ள சர்வதேச விமான நிலையங்களுக்கு, வாரத்திற்கு 130 முறை பயணங்கள் மேற்கொள்ளும் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஆணின் சடலம் மீட்பு

■ றொசேரியன் லெம்பட்

இலுப்பைக்கடவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிப்பியாறு அந்தோனியார் ஆலய வளாகத்தின் பின் பகுதியில் உள்ள சிற்றாலயத்திற்கு முன்பாக இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் வியாழக்கிழமை(26) மீட்கப்பட்டுள்ளது.

உயிலங்குளம் முதலை குத்தி பகுதியை சேர்ந்த 45 வயதுடைய அந்தோனி தெய்வீகன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற மன்னார் திடீர் மரண விசாரணை அதிகாரி பா.பிரபா நந்தன் சடலத்தை பார்வையிட்டு சடலத்தை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்க உத்தரவிட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இலுப்பைக்கடவை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

WCIC
Women's Chamber of Industry and Commerce
Engage - Empower - Enrich
In Collaboration with
USAID
FROM THE AMERICAN PEOPLE

WCIC
மேன்மைக்கு கௌரவம்
Women Entrepreneur Awards
வலுவூட்டல் AIA INSURANCE

இலங்கையின் சாதனைமிக்க மகளிர் தொழில்முனைவோரை அழைக்கின்றோம்

இலங்கையின் மகளிர் தொழில்முனைவோருக்கு அழைப்பு!!
தொழில்முனைவோருக்கான ம.தொ.வ.ச பிரதிபாபிஷேக
மகளிர் தொழில்முனைவோர் விருதுகள் 2024

விண்ணப்ப வகைகள்: வணிக விருதுகள் - தொடக்க, மைக்ரோ, சிறிய, நடுத்தர மற்றும் பெரிய.
மாகாண விருதுகள் - ஒவ்வொரு மாகாணத்திலும் சிறந்தவை.

வெற்றிகரமான விண்ணப்பதாரர்கள் டிஜிட்டல் தொழில்முனைவோர், புத்தாக்கமுள்ள தொழில்முனைவோர், சமூக தொழில்முனைவோர், சிறந்த ஸ்டார்ட் அப், மிகச் சிறந்த ஏற்றுமதி சார்ந்த தொழில்முனைவோர், மிகவும் நேர்மறையாகத் திறன் கொண்ட தொழில்முனைவோர் (உற்பத்தி மற்றும் சேவை), இளம் பெண் தொழில்முனைவோர் மற்றும் 2024 ஆம் ஆண்டின் மிக சிறந்த பெண் தொழில்முனைவோர் போன்ற சிறப்பு விருதுகளுக்கு பரிசீலிக்கத் தகுதியுடையவர்கள்.

என்ட்ரி கிட்டினை www.wcicsl.lk தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். பூர்த்தி செய்யப்பட்ட என்ட்ரி கிட்டினை சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் மற்றும் நுழைவுக் கட்டணச் சான்றுடன் WCICக்கு 2024 அக்டோபர் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன் அனுப்ப வேண்டும்.

அனுசரணையாளர்கள்
பிளட்டினம் | டயமன்ட் | ஒத்துழைப்புப் பங்காளர் | கோல்ட் | சில்வர் | ப்ரோன்ஸ்
AIA HEALTHIER, LONGER, BETTER LIVES | DFCC Aloka (Banking Partner) | USAID FROM THE AMERICAN PEOPLE | McLARENS GROUP SUNQUICK | The World Of Hayleys | IMPRA
ஊடக பங்காளர்-அச்சு/சமூக ஊடகம்
wijeya newspapers, the SUNDAY TIMES, DailyMirror, Daily FT, தமிழ்Mirror, Daily FT ONLINE, DailyMirror ONLINE, ONLINE, தமிழ்Mirror ONLINE
அறிவுசார் பங்காளர் EY Building a better working world
தொடர்பாடல் பங்காளர் triad

மகளிர் தொழில்துறை மற்றும் வர்த்தக சம்மேளனம் இலங்கை
இல.380/110, சரண வீதி, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07, இலங்கை, தொ.பே: 0112671762, மொபைல்: 0766848080

# மாற்றத்துக்கான வெற்றியின் உரிமையும் முட்டையும்

ஜனாதிபதித் தேர்தலில் நாடு 'மாற்றத்தை' அடையவில்லை, மாறாக, 'வரலாற்று மாற்றம்' 'உண்மையான மாற்றம்' அடைந்துள்ளது. அதிலிருந்து உதித்திருக்கும் இந்த சிவப்பு நட்சத்திரம் தற்செயலாக உருவாக்கப்படவில்லை. இரத்தம்-கண்ணீர்-வியர்வை-துக்கம்-வலி-சாம்பல்-தூசி-ஏமாற்றம்- வலிகள், ஆகியவற்றிலிருந்து பிறந்திருக்கிறது. அதனைக் காப்பாற்றிப் பாதுகாக்க வேண்டுமாயின், ஒவ்வொரு துறைகளைச் சார்ந்தவர்களும் அர்ப்பணிக்க வேண்டும்.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, புதன்கிழமை (25) இரவு தேசத்துக்கு ஆற்றிய விசேட உரையில், "பொதுப் பணிக்கு இடையூறு ஏற்படாத, பிரஜைகள் தொடர்பில் பாதகமான அழுத்தங்கள் ஏற்படாத வகையில், எதிர்பார்த்த மாற்றங்கள் படிப்படியாக மேற்கொண்டு நாம் முன்னோக்கிச் செல்வோம்" என வலியுறுத்தியிருந்தார்.

அத்துடன், பல விடயங்களையும் மிகக்காத்திரமாக முன்னவைத்திருக்கும் ஜனாதிபதி, மக்கள் ஆணை திரிபுபடுத்தியதாக காணப்பட்டமையால், பாராளுமன்றத்தைக் கலைத்தேன் என்றார். ஆக, பொதுத்தேர்தலின் வெற்றியைப் பிடித்துக்கொள்ளவே பல கட்சிகளும் முயலுகின்றன. அதுவும் ஜனநாயக உரிமையாகும்.

வெற்றியின் உரிமையை நமது நாட்டின் அனைத்து மக்களுக்கும் அர்ப்பணிக்க விரும்புகிறேன் என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி, நாட்டைக் கட்டியெழுப்பும் பணிக்குத் தோள் கொடுப்பதற்கான பலம் இருக்கும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். அந்த நம்பிக்கையை ஒவ்வொருவரும் வென்றெடுக்க வேண்டும் என்பதே பலரது எதிர்பார்ப்பாகும்.

எமக்கு அதிகாரத்தைக் கையளிக்கையில் 'மாற்றம்' ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணக் கருவே மக்களிடத்தில் ஆழமாகப் பதிந்திருந்தது. 'மாற்றம்' என எமது நாட்டு மக்கள் கருதுவது அரசியல் முறைமையில் காணப்படும் அனைத்துவிதமான மோசமான பண்புகளை மாற்றுவதையாகும். தற்போது அது நிரூபனமாகியுள்ளது என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

சகல பிரச்சினைகளுக்கும் உடனடியாக தீர்வு காணமுடியாது. ஆனால், ஜனரஞ்சக தீர்மானங்களை எடுக்கும் அதேவேளை, அதிரடி முடிவுகளை அவசியம். கடந்த அரசாங்கங்களில் விலைகள் குறைக்கப்பட்டன. ஆனால், அமுல்படுத்தப்படவில்லை. அதனைக் கண்காணிக்கவும் இல்லை. இதனால், சாமானிய மக்களே பாதிக்கப்பட்டனர்.

ஜனாதிபதி அனுர பதவியேற்றதன் பின்னர், முட்டையின் விலை குறைந்துள்ளது. ஆனால், முட்டையைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் உணவு பண்டங்களின் விலைகள் குறைக்கப்படவில்லை. அதனைக் கண்காணித்து, நுகர்வோர் உரிமைச் சட்டங்களை மீறுவோருக்கு எதிராக எவ்விதமான தயவு தாட்சியம் இன்றி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பாடசாலைகளில் தவணை பரீட்சைகளில் சகல பாடங்களிலும் எவ்விதமான புள்ளிகளையும் பெறாத மாணவர்களுக்குப் பூஜ்ஜியம் போடுவது கடந்த காலங்களில் வழக்கமாக இருந்தது. அதனை முட்டை வாங்கி விட்டார் என்றே கூறுவதை கேள்விப்பட்டிருக்கிறோம்.

எனினும், நவம்பர் 21ஆம் திகதியன்று நடந்துமுடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி, மிகமுக்கியமான பரீட்சையில், 5,740,179 வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றுள்ளது. இது சாதாரண வெற்றியல்ல. அதனைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டுமாயின், சாமானிய மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேற்றப்படவேண்டும். விலைகள் குறைந்தால் அமுல்படுத்த வேண்டும். இல்லையேல், முதல் முட்டையே மாற்றத்துக்கான வெற்றியை அபகரித்து விடும் என்பதே எமது அவதானிப்பாகும்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

சிறப்பான காதலை வீம்புடன் எவரும் புறந்தள்ளினால், எதிர்காலத்தில் ஏக்க நிலையில் வாழவேண்டி ஏற்படும். காதலின் ஆழம், எதிர்காலத்தில் நம்பிக்கையான பரஸ்பர அன்பையும் விட்டுக் கொடுப்பையும் அழுத்தமாக்குகின்றது. எதையும் உணராமல் நெஞ்சத்துக்கு வஞ்சகம் செய்வதுபோல், பிரிவதால் வரும் ஏக்கம், வாழ்வின் அந்தம்வரை தொடரும்.

குடும்பங்கள் மூலமாகவும் நண்பர்கள் மூலமாகவும் உறவினர்கள் ஊடாகச் சொல்லப்படும் விமர்சனங்களைக் காதில் செலுத்தினால், பலரும் உண்மை நிலைபற்றிச் சிந்திப்பதில்லை.

ஒருவரைப் பற்றி ஒருவர் உணர, கால அவகாசம் பிரதானமானது. தங்களது தெரிவு சிறப்பானது என தெரிந்து கொண்டதன் பின்னர், மனம் அலை மோதக்கூடாது. ஆரம்பத்திலேயே சந்தேகத்துடன் பார்க்கப்பட்டால், நல்ல முடிவை எடுக்க முடியாது. இத்தகையவர்கள் பெற்றோரால் தீர்மானிக்கப்படும் தீர்மானங்களை ஆராயாமல் கெடுத்தும் விடலாம்.

காதல் கலைந்தால், சம்பந்தப்பட்ட ஆண், பெண் பழி தீர்க்கும் செயலில் ஈடுபடுவது தவறாகும். உண்மைக் காதலர் இணைந்தால் சிறப்பு.

நன்றி-பருத்தியூர் பாலவயிரவநாதன்



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

போரின் முடிவின் 15 ஆண்டுகளின் பின் – 19

# சுமாதானத்திற்கான போரரசியல் - 3

1993 இல் தனது தேர்தல் பிரசாரத்தில் வாக்குறுதியளித்தபடி, குமாரதுங்க புலிகளுடன் அரசியல் பேச்சுவார்த்தைகளில் இறங்கினார். பேச்சுவார்த்தைகளுக்கு வழிவகுத்த பல உந்துதல்கள் இருந்தபோதிலும், அவரது முயற்சிகள் தைரியமானவை என்று பரவலாகக் கருதப்பட்டது.

குறிப்பாக விடுதலைப் புலிகள் 1993இல் ரணசிங்க பிரேமதாச, லலித் அத்துலத்முதலி, 1994இல் காமினி திசாநாயக்க ஆகியோரை கொலை செய்ததன் பின்னணியில் பேச்சுவார்த்தைகளுக்கு இறங்குவது என்பது ஆபத்தானதாகக் கருதப்பட்டது.

குறிப்பாக பேசுவதற்கான எந்த சமிக்ஞையையும் புலிகள் தந்திராத சூழலில் பேச்சுகளுக்குத் தயாராவது நல்லதல்ல என்பதே பலரது கருத்தாக இருந்தது. அதிலும் குறிப்பாக 1991ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி புலிகளால் கொல்லப்பட்டமையானது பேச்சுகளுக்குப் பெரியண்ணான இந்தியா எப்போதும் தடையாக இருக்கப் போவதை உறுதி செய்தது.

இந்தத் தடைகளையும் மீறி, குமாரதுங்க விடுதலைப் புலிகளுடன் பேசுவது என்ற முடிவில் உறுதியாக இருந்தார்.

பேச்சுகளுக்கு அழைப்பு விடுத்தார். சில அவதானிகளின் கூற்றுப்படி, 1995இல் புலிகள் தங்கள் அரசியல் அந்தஸ்தை மேம்படுத்தவும், வடக்கில் தாங்கள் நடத்திக் கொண்டிருந்த இராணுவமயமாக்கப்பட்ட அரை அரசைப் பாதுகாக்கவும் பொதுஜன முன்னணி அரசாங்கத்துடன் ஒரு பேச்சுவார்த்தைகளுக்கு உடன்பட்டனர்.

புலிகளுடனான பேச்சுவார்த்தை செயல்முறை தொடங்கியவுடன், பொதுஜன முன்னணி அரசாங்கம் பிளவுபட்டிருந்த அரசியல் உயரடுக்கினரிடையே அதிகரித்து வரும் சண்டைகளில் சிக்கியது.

விடுதலைப் புலிகளின் இராணுவ நடவடிக்கைகள் நாட்டின் பொருளாதாரத்தை அதளபாதாளத்திற்கு தள்ளின. இந்த நிகழ்வுகள் குமாரதுங்கவின் 'சமாதானத்தின் மீதான அவாவை' நிரூபிப்பதற்குத் தனிப்பட்ட முறையில் சவால் விட்டன.

அது அவரது அரசாங்கத்தின் பிழைப்புக்காக மட்டுமல்ல, அவரது தனிப்பட்ட அரசியல் வாழ்க்கையையும் காப்பாற்றுவதற்காகத் தேவைப்பட்டது.

போர்க்களத்தில் பெற்ற சிறுசிறு வெற்றிகள் ஊட்டிய போதை, சமாதானத்தை நோக்கிய பாதையில் இருந்து புலிகளைத் தடப்புரட்டியது.

எனவே நல்லெண்ண சமிக்கைகளை புலிகள் வழங்கத் தவறினர். இந்த சூழ்நிலைகளின் கலவையானது எதிர்காலத்தில் சமாதானம் மற்றும் சமாதான பலன்களை வழங்குவதற்கான நம்பிக்கையுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவது குமாரதுங்கவிற்கு தனிப்பட்ட விருப்பமாகவன்றி, தீவிர அரசியல் தேவைகளாகவும் சூதாட்டமாகவும் இருந்தன.

இலங்கை அரசியல் குறித்து நன்கறிந்த, தங்களை மிதவாதிகளாகக் கருதியோரின் கருத்துப்படி, குமாரதுங்கவினால் விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்ட 'சமாதான பொதி', இன்றுவரை நாட்டில் உள்ள எந்தவொரு சிங்கள அரசியல் தலைமையினாலும் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்வுகளை விட மிகவும் மேம்பட்ட முற்போக்கான முயற்சியாகும்.

இலங்கையில் இனப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வை எட்டுவதில் குமாரதுங்க அளவிற்கு நியாயமாகவும் நல்லெண்ணத்தோடும் வேறெந்த அரசியல் தலைவரும் நடக்கவில்லை என்பது பொதுக் கருத்தாகும்.

சுனாமியின் பின்னர் விடுதலைப் புலிகளும் அதிகாரங்களை வழங்குகின்ற சுனாமிக்குப் பிந்தைய கூட்டுச் செயல்பாட்டு மேலாண்மைக் கட்டமைப்பை அவர் ஏற்றுக் கொண்டார் (அது அரசியலமைப்புக்கு முரணானது என்று நீதிமன்றமே தடுத்தது).

குமாரதுங்க உயர் அரசியல் முயற்சிகளுக்கு இணையாக, உள்ள சமாதான இயக்கங்கள் மற்றும் திட்டங்களுக்கு அரச அனுசரணையை வழங்குவதன் மூலம், அனைத்து இனப் பின்னணியிலிருந்தும் சாதாரண சமூகங்களுக்குள் அமைதிக்கான நுண்ணிய மற்றும் இடைநிலை இடைவெளிகளைக் குறைக்கவும் அடிமட்டத்தில் சமூகங்களிடையே நம்பிக்கையையும் பரஸ்பர ஒத்துழைப்பையும் உருவாக்கவும் அவர் ஆதரவளித்தார்.

சாம பலகாயா (அமைதி ஒற்றுமைப் படை), சுடு நெலும் வணிகாயா (வெள்ளை தாமரை இயக்கம்) மற்றும் சாமா தவலமா (அமைதி வாகனம்).

அவரது முயற்சிகள் அரசியலமைப்பு விவகார அமைச்சகத்திற்குள் தேசிய ஒருங்கிணைப்பு திட்ட அலகு போன்ற மிகவும் தேவையான அமைதியை மையமாகக் கொண்ட அரச உள்கட்டமைப்பு வசதிகளை நிறுவுவது வரை சென்றது.

இந்த நடவடிக்கைகளுக்கு இணையாக, குமாரதுங்க அரசியலமைப்பு சீர்திருத்தங்களின் செயல்முறையையும் தொடங்கினார்,

இது பரவலாக 'அரசியல் பொதி' என்று அறியப்படுகிறது. இந்த சீர்திருத்தச் செயல்முறையானது, குமாரதுங்க தனது இரண்டாவது பதவிக் காலத்தில், 2000ஆம் ஆண்டில் இதைப் புதுப்பித்து ஒரு வரைவு அரசியலமைப்பை உருவாக்கினார்.

குறிப்பாக விடுதலைப் புலிகளின் இராணுவ நடவடிக்கைகளால் இராணுவ வீரர்களின் உடல்கள் இலங்கையின் தென்பகுதிக்கு வந்துகொண்டிருந்தன.

இராணுவத்தில் போரைத் தொடர்வதற்கான மிருகத்தனமாக ஆதரவு இருந்தது. இருந்தபோதிலும், சமாதானத்தை அரசியலமைப்பின் வழியாக அடையும் முயற்சியை குமாரதுங்க கைவிடவில்லை.

பெரும்பான்மையான சிங்களவர்கள் குமாரதுங்கவின் சமாதான முயற்சிகளை யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான நிரந்தர அரசியல் தீர்வை நோக்கிய சாதகமான அறிகுறிகளாகக் கருதினர்.

குமாரதுங்கவின் சமாதான பொதி தெற்கு சிங்கள அரசியலில் ஒரு நெறிமுறை அரசைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு நேர்மறையான முன்னேற்றமாகும். அக்காலப்பகுதி குறித்த பெரும்பான்மை சிங்களவர்களின் மனநிலை என்பது "சந்திரிகாவின் காலத்தில் மகிழ்ச்சியாக இருக்கலாம். சமாதானம் இல்லையென்றாலும் குறைந்த பட்சம் சமாதானத்தின் சின்னங்களாவது இருந்தன". மேலும், தென்னிலங்கை அரசியல் உரையாடலில் ஒரு மோசமான வார்த்தையாக இருந்த சமஷ்டி என்ற சொல் கூட மக்கள் மத்தியில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சிங்கள மக்களின் பெரும்பான்மையானோரை சமாதானம் நோக்கியும் - குறிப்பாகப் போர் நடந்து உயிர்ச்சேதம் நிகழ்ந்து கொண்டிருந்த நிலையிலும், சமஷ்டி தீர்வுக்கான ஆதரவு நோக்கியும் நகர்த்திய பெருமை குமாரதுங்கவைச் சாரும். ஆனால், அதைப் பயன்படுத்தித் தீர்வை நோக்கி நகர விடுதலைப் புலிகள் தயாராக இருக்கவில்லை.

தமிழ் மக்கள் மத்தியிலும் குமாரத்துங்க மீதான நல்லபிப்பிராயம் இருந்தது. பொது மக்களின் கருத்துக்களுக்கு முற்றிலும் மாறாக, 2002 மாவீரர் நாள் உரையில் புலிகளின் தலைமை, "தமிழர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் சந்திரிகா சமாதானத்தின் தெய்வம் அல்ல, நாங்கள் அவரை இராணுவத் தீர்வுக்குப் பந்தயம் கட்டும் கடும்போக்குவாதியாகக் கருதுகிறோம். எங்கள் பார்வையில் சந்திரிகா ஒரு போர் வெறியர்" என்று குறிப்பிட்டது.

குமாரதுங்கவின் சமாதான நிகழ்ச்சி நிரல் மற்றும் உயரடுக்கு அரசியல் மற்றும் சிங்கள தெற்கில் அதன் விளைவுகள் பற்றிய மேலதிக பகுப்பாய்வுகள் அவசியமானவை. இங்கு இரண்டு வினாக்கள் முக்கியமானவை.

முதலாவது, தெற்கில் குமாரதுங்கவின் முயற்சிகளுக்கான எதிர்ப்பின் காரணம் என்ன. இரண்டாவது, எவ்வடிப்படையில் விடுதலைப்புலிகள் குமாரதுங்கவின் தீர்வு முன்மொழிவுகளை அலட்சியம் செய்தனர்.

சந்திரிக்காக தீர்வு நோக்கிய தனது நகர்வுக்கு சர்வதேச மத்தியஸ்தத்தை நாடினார். இது தென்பகுதி அரசியலில் ஒரு புதிய அதேவேளை, முள்போன்ற பிரச்சினையை உருவாக்கியது.

ஏனெனில், அந்நியத் தலையீடு குறித்த நேர்மறையான அனுபவத்தையே சிங்களவர்கள் பெற்றிருந்தார்கள். இந்நிலையிலேயே விடுதலைப் புலிகள் சர்வதேச மத்தியஸ்தத்தை ஏற்று கொண்டார்கள்.

பிரான்ஸ், ஜப்பான், இந்தியா எனப் பல நாடுகள் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டு இறுதியில் நோர்வே என்று முடிவானது.

ஜெயவர்த்தனா மற்றும் பிரேமதாசாவின் முந்தைய இரண்டு யூ.என்.பி ஆட்சிகளின் போது இலங்கையின் மோதலில் மூன்றாவது தரப்பினராக இந்தியாவின் சர்ச்சைக்குரிய பாத்திரத்திற்குப் பிறகு எந்தவொரு வெளி மத்தியஸ்தத்தையும் தொடர்ந்து நிராகரித்தது குறிப்பிடத்தக்கது. ஜயவர்தன ஆட்சியின் போது, ஜே.வி.பி மற்றும் பிற சிறிய சிங்கள தேசியவாத அரசியல் கட்சிகளும் எந்தவொரு வெளிநாட்டுத் தலையீட்டையும் நிராகரிப்பதற்கு ஆதரவாகக் குரல் கொடுத்தன. இந்தக் கட்சிகள் அனைத்திற்கும் மத்தியில், ஜே.வி.பி., ஜனாதிபதி பிரேமதாசவின் ஆட்சிக் காலத்தில், எந்தவொரு சர்வதேச ரூடவ்டுபாட்டையும் கடுமையாக நிராகரித்தது.

அதுமட்டுமல்லாமல், ஜே.வி.பியின் கருத்துப்படி, இந்தியப் பிராந்திய மேலாதிக்கம் மற்றும் இலங்கையில் இந்தியாவின் செல்வாக்கை விரிவுபடுத்துவதற்கான இந்தியச் சதி என்ற ஊகங்கள், அவர்களின் நாடளாவிய எதிர்ப்புகள் மற்றும் எதிர்ப்பிற்கான மற்ற காரணங்களாக இருந்தன, அதை ஜனாதிபதி பிரேமதாசா கொடூரமாக முறியடித்தார். இந்திய அமைதி காக்கும் படைகளின் கைகளால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணத் தமிழ் மக்களிடையேயும் அந்நியத் தலையீடு குறித்த கசப்பான நினைவுகள் இருந்தன.

ஜே.வி.பி.யை ஒடுக்குவதற்கு பிரேமதாசா வன்முறையைப் பயன்படுத்தினார். ஜே.வி.பி அரச பாதுகாப்பு மற்றும் ஆயுதப்படை உறுப்பினர்களைக் கொன்று இராணுவம் மற்றும் காவல்துறையில் பணியாற்றியவர்களையும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களையும் அச்சுறுத்தினார்.


இந்த காலகட்டத்தில், வன்முறைச் சம்பவங்களால் 40,000 பேர் இறந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. இருந்தபோதும், அந்நியத் தலையீட்டைத் தொடர்ச்சியாக ஜே.வி.பி. எதிர்த்து வந்தது.

எவ்வாறாயினும், 1999 முதல் 2005 வரையிலான குமாரதுங்கவின் இரண்டாவது பதவிக்காலத்தில், அவரது கூட்டணி அரசாங்கத்தில் பங்காளியாகி, இலங்கையின் ஆளும் உயரடுக்கின் புதிய உறுப்பினராக நியமிக்கப்பட்டதன் மூலம், ஜே.வி.பி. குமாரதுங்கவின் பேச்சுவார்த்தை முயற்சிகளுக்கு ஆதரவை வழங்கியது.

பொதுஜன முன்னணியின் கூட்டணி அரசாங்கத்திலிருந்து ஜே.வி.பி. பிரிந்து செல்லும் வரை, அது பெரும்பாலும் மௌனமாக இருந்ததுடன், இலங்கையின் மோதலில் நோர்வே அரசாங்கத்தின் மத்தியஸ்தத்திற்கு மிகுந்த சகிப்புத்தன்மையைக் காட்டியது.

## கடிதங்கள்

### அதிகாரிகள் கவனம் செலுத்துவார்களா?



அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பகுதியில் உடங்கா பகுதியில் குடிநீர் வீண் விரயமாவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வீதி புனரமைப்பின் பின்னர் சேதமாக்கப்பட்டதாகக் கூறப்படும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்குச் சொந்தமான குடிநீர் குழாய் திருத்தப்பட்ட பின்னர் இவ்வாறு மேலதிக நீரைத் தினமும் வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் சம்மாந்துறை பகுதியில் இன்னும் பல குடும்பங்கள் குடிநீர் இணைப்பின்றி அல்லல்பட்டு வரும் நிலையில் இவ்வாறு வீணாக நீர் வெளியேற்றப்படுகின்றமை தொடர்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவை தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

-பாறுக் ஷிஹான்



## ‘சுற்றுலாத்துறையில் பெண்கள்’

# பயிற்சி அமர்வு முன்னெடுப்பு

உலக சுற்றுலா தினத்தை கொண்டாடும் வகையில், Intrepid கொழும்பு அண்மையில் முதலாவது ‘சுற்றுலாத்துறையில் பெண்கள்’ பயிற்சி அமர்வை வெற்றிகரமாக முன்னெடுத்திருந்ததாக அறிவித்துள்ளது. இந்நிகழ்வு கண்டியில் அண்மையில் நடைபெற்றது. சந்தை அபிவிருத்தி வசதி (MDF) நிகழ்ச்சித் திட்டம் மற்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை (SLTDA) ஆகியவற்றுடன் இணைந்து Intrepid முன்னெடுத்திருந்தது. இலங்கையின் சுற்றுலாத் துறையில் பாலின சமத்துவம் மற்றும் பெண்களுக்கு வலுவூட்டல் ஆகியவற்றை ஊக்குவிக்கும் வகையில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

45 விண்ணப்பதாரிகளில் மத்திய மாகாணத்தைச் சேர்ந்த பல்வேறு பின்புலங்களைக் கொண்ட சுற்றுலா வழிகாட்டிகளாக திகழ எதிர்பார்க்கும் 11 பெண்கள் முதல் அமர்வில் பங்கேற்றனர். இந்தப் பயிற்சிப்பட்டறையினூடாக சுற்றுலாத் துறையில் பிரவேசித்து இயங்குவதற்கு அவர்களுக்கு அவசியமான திறன்கள், அறிவு மற்றும் தன்னம்பிக்கை போன்றன வழங்கப்பட்டிருந்தன.

பங்குபற்றுநர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், “இந்த நிகழ்ச்சித் திட்டம் உண்மையில் வாழ்க்கையை மாற்றியமைப்பதாக அமைந்துள்ளது. ஒரே விதமான ஈடுபாடு மற்றும் ஆர்வம் மிக்க சக பெண் தலைமையாளர்களை சந்திப்பதற்கான வாய்ப்பை Intrepid ஏற்படுத்தியிருந்தமைக்கு நன்றி. சுற்றுலா வழிகாட்டியாக திகழ்வதற்கான அம்சங்களை மட்டும் பயில்வது என்பதல்லாமல், எமது தன்னம்பிக்கையை கட்டியெழுப்புவது மற்றும் சமூக தடைகளிலிருந்து மீள்வதற்கு அவசியமான தன்னம்பிக்கையை கட்டியெழுப்புவதாகவும் அமைந்துள்ளது. எனது சமூகத்திலுள்ள ஏனைய பெண்களுக்கு நான் முன்மாதிரியானவளாக திகழலாம் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளேன்” என்றார்.

பரந்தளவு பிராந்தியங்களின் பெண்களை கவர்ந்து, அவர்களை மேம்படுத்தும் வகையில் முன்னெடுக்கப்படவுள்ள பயிற்சி அமர்வுகள், இலங்கையின் ஏனைய மாகாணங்களுக்கும் விரைவில் விரிவாக்கம் செய்யப்படும். நிகழ்ச்சித் திட்டத்தின் நிறைவில், நாடு முழுவதையும் சேர்ந்த சிறந்த 10 பங்குபற்றுநர்கள் தெரிவு செய்யப்பட்டு, தேசிய சுற்றுலா வழிகாட்டி சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கான புலமைப்பரிசில் வழங்கப்படும். அதனை பூர்த்தி செய்ததும், Intrepid’ இன் சுற்றுலா தலைவர்கள் குழுவில் அங்கம் பெறும் வாய்ப்பளிக்கப்படுவதுடன், சர்வதேச மட்டத்தில் தமது திறமைகளை வெளிப்படுத்துவதற்கான பிரத்தியேகமான வாய்ப்பும் வழங்கப்படும்.

Intrepid இன் இலங்கைக்கான பொது முகாமையாளர் பூர்ணிக தெல்பசித்ர கருத்துத் தெரிவிக்கையில், “பெண்கள் முக்கிய அங்கம் வகிக்கும் உள்ளடக்கமான சுற்றுலாத் துறையை உருவாக்குவது எமது நோக்காக அமைந்துள்ளது. சுற்றுலாத் துறையில் பெண்களுக்கு வலுவூட்டுவதனூடாக அவர்களின் பிரத்தியேக மற்றும் நிபுணத்துவ அபிவிருத்தியில் பங்கேற்பதற்கு வாய்ப்பளிக்கப்படும் என்பதிலும், பிரயாணிகளுக்கு பரந்தளவு அம்சங்களை பெற்றுக் கொடுப்பதனூடாக அவர்களின் பிரயாண அனுபவத்தை மேம்படுத்தக்கூடியதாகவும் இருக்கும் எனபதிலும் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். இந்தத் திட்டம் நாடு முழுவதிலும் முன்னெடுக்கப்படுவதுடன், இலங்கையின் சுற்றுலாத் துறையில் பெண்களின் பங்கேற்பு சதவீதத்தை அதிகரிக்கச் செய்வதில் அசல் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதிலும் நம்பிக்கை கொண்டுள்ளோம்.” என்றார்.

MDFஇன் இலங்கைக்கான பணிப்பாளர் மர்யம் பிரச்சா கருத்துத் தெரிவிக்கையில், “Intrepid இலங்கை மற்றும் அவுஸ்திரேலியாவின் MDF இடையிலான பங்காண்மை என்பது பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட பிரயாணத்தை மையமாகக் கொண்ட வியாபாரங்களை ஊக்குவிப்பதுடன், இலங்கையின் சுற்றுலாத் துறையில் உள்ளடக்கமான பெறுமதி சங்கிலிகளை ஏற்படுத்தி, மாகாண சபைகளிடமிருந்து பிராந்திய ஆதரவைப் பெற்றுக் கொடுப்பதாகவும் அமைந்துள்ளது. சுற்றுலாத் துறையில் அதிகளவு பெண்களை பங்கேற்கச் செய்ய ஊக்குவிப்பது என்பது, ஊழியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதிலும், உள்ளடக்கமான வளர்ச்சி வாய்ப்புகளை ஏற்படுத்துவதிலும் பங்களிப்புச் செய்யும். மத்திய மாகாணத்தில் முன்னெடுத்திருந்த அறிமுக பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றுநர்களிடமிருந்து கிடைத்திருந்த வரவேற்பை காண்பதையிட்டு MDF மகிழ்ச்சியடைவதுடன், இதர திட்டமிட்ட மாகாணங்களில் Intrepid உடனான எமது பங்காண்மைக்கமைய இணைந்து செயலாற்றவும் எதிர்பார்க்கின்றோம்” என்றார்.

## ESOFT Metro கம்பஸ் மற்றும் LEAP மையம்

# புலமைப்பரிசில்களை வழங்க கைகோர்ப்பு




இலங்கையின் திறமைசாலிகளுக்கு சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தகைமைகளை வழங்கி பங்களிப்பு வழங்கும் முயற்சிகளின் அங்கமாக, இலங்கையின் முன்னணி தனியார் துறை உயர் கல்வி வலையமைப்பாக திகழும் ESOFT Metro கம்பஸ், LEAP மையத்துடன் இணைந்து, நாடு முழுவதையும் சேர்ந்த 50 மாணவர்களுக்கு ரூ.55 மில்லியன் பெறுமதியான புலமைப்பரிசில்களை வழங்க முன்வந்துள்ளது.

வியாபார முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், சட்டம், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் சேவைகள் மற்றும் நிலஅளவையியல் போன்ற பிரிவுகளில் முழுமையான மற்றும் அரைப்பகுதி கற்கைகள் கட்டணத்தை ஈடு செய்யக்கூடிய வகையில் இந்தப் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டிருந்தன. தமது கற்கை காலப்பகுதியில் தமது கட்டணத்தில் முழுமையான விலக்கழிப்பை இந்த மாணவர்கள் அனுபவிப்பதுடன், அரைப்பங்கு புலமைப்பரிசிலை பெற்றவர்களுக்கு, தமது மொத்த கற்கைச் செலவில் 50 சதவீதத்தை மாத்திரம் செலுத்த வேண்டியிருக்கும்.

மாணவர்களுக்கு தமக்கான தகைமைகளை பெற்றுக் கொள்ள வாய்ப்பளிப்பதுடன், வழங்கப்பட்ட தொகையை வட்டியின்றி மீளச் செலுத்தும் வகையில் இந்தத் திட்டம் அமைந்துள்ளது. தமது கற்கையை பூர்த்தி செய்து ஒரு வருடத்தின் பின்னர் மீளச் செலுத்தலை ஆரம்பிக்கும் நெகிழ்ச்சித்தன்மையை மாணவர் கொண்டிருப்பர். முழுத்தொகையும் மூன்று முதல் ஐந்து வருட காலப்பகுதியினுள் மீளச் செலுத்தப்பட வேண்டும்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற வைபவத்தின் போது புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டிருந்தன. பிரதான உரைகளை LEAP மையத்தின் ஸ்தாபக தலைவரும், ESOFT Metroகம்பஸ் தவிசாளர் /குழும முகாமைத்துவ பணிப்பாளர் கலாநிதி. தயான் ராஜபக்ஷ மற்றும் முன்னாள் கல்வி அமைச்சர் கலாநிதி. சுசில் பிரேமஜயந்த ஆகியோர் ஆற்றியிருந்தனர். LEAP மையம், ‘பயிலல், சம்பாதித்தல் மற்றும் செலுத்தல்’ (Learn, Earn, and Pay) எனும் கொள்கையின் பிரகாரம் வழிநடத்தப்படுவதுடன், இதனை ஒரு இலாப நோக்கற்ற அமைப்பாக, மாணவர்களின் கற்றலுக்கு ஆதரவளிக்கும் வகையில் சுய நிலைபேறான கட்டமைப்பை ஏற்படுத்த இதர நிறுவனங்கள் மற்றும் பங்காளர்களுடன் தொடர்பை ஏற்படுத்தும் நோக்கில்,கலாநிதி. தயான் ராஜபக்ச நிறுவியிருந்தார். இதனூடாக பட்டதாரிகளுக்கு தொழிலுக்கு தம்மை தயார்ப்படுத்தவும், அவசியமான திறன்களை கொண்டிருக்கவும், எதிர்காலத்தை நம்பிக்கையுடன் முகங்கொடுக்கவும் தயார்ப்படுத்தவும் உதவியாக அமைந்திருந்தது.

LEAP மையத்தினால், உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் காணப்படும் சகல பல்கலைக்கழகங்கள், கல்வி நிலையங்கள் மற்றும் நிபுணத்துவ அமைப்புகளுக்கு தம்முடன் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு வழங்கப்பட்டுள்ளது. அதனூடாக இலங்கையின் எதிர்கால இளைஞர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவதில் அங்கம் வகிக்குமாறு அழைத்துள்ளது. உங்கள் நிதியளிப்பு மற்றும் ஆதரவு போன்றன LEAP மையத்துக்கு, தேவையுடைய மாணவர்களுக்கு வழங்கும் வாய்ப்புகளை மேலும் மேம்படுத்த உதவியாக அமைந்திருக்கும்.



# சொற்கள் பெருங்கடல்...

யாரின் மீதோவான
ஏதோவொன்றை
என் மீதேதிணித்து போவாய்
பெரும் மௌனமென.....

யாத்திரை மீளும்
சாமான்யனின்
ஆறுதல்கள்
கடவுளின் மீதான
தீர்ந்து போன காதலை
மீள உயிர்ப்பிக்கும்...

இரவுப் பாடகனின்
அந்தரிப்பினை
மீட்டமுடியாத
வாத்தியமொன்றின்
நரம்புகள் நீ ...

தீயின் தீராத
நாவுகளிடையே
நீர் குறித்தான
வேட்கைகள்
இன்னமும் வாழும்
நிலமீட்பின்
கதையாடல்கள் ...

கடந்துபோன
ஒருபக்கத்தின்
மீதானநம்பிக்கைகளுடன்
இன்னும் புரட்டப்படாத
கணக்கற்றபக்கங்கள் ...

சொற்கள்
பெரும்கடல் ...



லலித்தா



# மனசு



ஒரு பொல்லாத மனசு
காய்ச்சல் வந்த உடம்பு போல
கடும் கொதியாய் கிடக்கிறது
சளி கட்டிய தொண்டையாய்
சில நேரம் தனக்குள்
கரகரத்தும் தவிக்குது
பரிதவிப்புகளை சொல்லத்
திராணியற்று உடைந்துபோகுது...

வெள்ளிகள் பரவலாய் சிரிக்கிற
வானமாக அடிக்கடி
சிரித்துக் கொண்டே
இருக்க வேண்டுமென
கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிற
மனசை தேடி வந்து சில மனுஷ ஜென்மங்கள்
கலைத்துவிட்டுப் போகையில்
அதுதன் இயல்பை இழந்து விடுகிறது....

வகைவகையான உறவுகளும்
நட்புக்களும்
ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதம்
சாகப் போகிறவயதிலும்
சங்கடங்கள் குறையாதமாதிரி

மனசென்ன அனைத்தும் கடந்த
ஆன்மப் பழமா?
முற்றிய ஞானப்பழமா?
தவிக்கிற துடிக்கிற சாதாரணம்
தான் கனபேருக்கு...

பொத்திப் பொத்தி ஒரு செடியைப்
போல அதனை வைத்து
நாளாந்தம் நல்ல சிந்தனை வளர
நாயகத்தின் சொற்களூற்றி
நலமுடன் வைத்திருக்கப்
பிரியம் கொண்டேன்...


ஆயினும் முடியவில்லை
பல நேரங்களில்
மனித ஷரூபத்தில் வருகிற
பிசாசுகளால் மனசு காய்ச்சலிலும்
கனத்த உளைச்சலிலும்
சுருண்டு படுக்கத்தான்
செய்கிறது பாவம்...

பாலையூற்று அஷ்;ரபா நூர்தீன

# இறுதியில் அறமே வெல்லும்

நிர்க்கதியாய்
நின்றாலும்
நீதியை தேடுவேன்
அவமானங்களும்
சன்மானங்கள் தான்
சலிப்படையாமல்
முயற்சிக்கின்றேன் முன்னேற...

நேருக்கு நேர் மோதுகிறார்கள்
வசைபாடி வாய் தர்க்கம் செய்து செய்து
மானத்தை நஷ்டபடுத்துகிறார்கள்
மனிதவதைகள் இன்னும்
தொடரத்தான் செய்கின்றன
பிறரை இழிவு படுத்த
இங்கிதமாய் களத்தில்
இறங்கி விட்டார்கள்
இறங்கட்டும் நியாயங்கள் தோற்பதில்லை...




தோல்களும் இங்கே இசையாகிறது
உடுக்கையாய், மேளமாய்
ரசிக்க தெரிந்த மனதிற்கு
தோலுரித்த கதறல்கள் ஏன்?
கேட்கப்படவில்லை...

புல் என்றாலும் மரமாக
தானே வளர்கிறது,
அந்த மூங்கில்கள்,
அவமரியாதையாய் நடத்துவதற்காகவே
வேதனங்களே பெறுகிறார்கள் போலும்,
நல்லபடியாக உறங்குவதற்கு
பிறரை அற்பமாய் நகையாடி விடவேண்டும் போலும்...

கனவிலும் பிறரை புண்படுத்துவது தான்
பொழுதுபோக்கோ?
நான் நானே! யாரை விட்டு
வைத்தது இந்த ஆணவம
ஆணவம் கொண்டு அழிந்த
வரலாறுகள் அறியப் படவேண்டும்...


திறமை படைத்தும் புதுமை படைத்தும் இருந்தாய்
பூரணத்துவம் பெற்றாயா குறைகள் இருக்கதானே செய்கிறது
புண்படுத்தினால் பண்படுத்தபடுகிறேன் புரிந்துகொள்!
வீழமாட்டேன் வாழ்ந்து காட்டுவேன்...


நியாயமும் நேர்மையும் என் ஆயுதங்கள்
என் ஆண்டவரை தரிசிப்பேன்
என்னை நானே அங்கிகரித்து கொள்கிறேன்
அநீதி அழிந்து தானே போகும், இறுதியில் அறமே வெல்லும்
பிறரை காயபடுத்தினால் நீயே காயப்பட்டு போவாய்...



சசிரேக்கா சிவப்பிரகாசம் – உடப்புசல்லாவை

# THE BICYCLE THIEVES






எஸ்.கிறிஸ்டினா,
3ஆம் ஆண்டு மாணவி,
ஊடக ஆய்வுகள்,
யாழ். பல்கலைக்கழகம்.

இத்திரைப்படம் விட்டோரியோ டி சிகா இயக்கத்தில் அலெஸாண்ட்ரோ சிகோக்னினி இசையமைப்பில் 1948ஆம் ஆண்டு இத்தாலியில் வெளிவந்த திரைப்படமாகும்.

அன்டோனியோ என்பவரும் அவரது மனைவியும் ஒரு தொழிலைச் செய்வதற்காக துவிச்சக்கரவண்டியொன்றினை ஏற்பாடு செய்கின்றனர். ஒரு நிபந்தனை அடிப்படையில் வேலையைச் செய்யத் தயாராகிய பின்னர் துவிச்சக்கரவண்டியானது திருடப்படுகின்றது. அதைத் தேடுவதற்காக மனைவி அடகுக்கடை நோக்கிச் செல்கின்றார். பின்னர் அன்டோனியோ ஒரு வயதானவரை நோக்கிச் செல்கின்றார். அனைத்து முயற்சிகளும் வீண் போகவே இறுதியில் தனது மகனோடு துவிச்சக்கரவண்டியை தேடி அலைகின்றார். சைக்கிள் கிடைத்துவிட வேண்டுமென மகன் தீவிரமாகத் தேடுவதும் இறுதியில் தந்தை ஒரு துவிச்சக்கரவண்டியை திருடுவதை மகன் காண்பதுமாகக் கதையின் நகர்வு செல்கின்றது. இறுதியில் தந்தை கையும் களவுமாக பிடிபட்டு பொலிஸாரிடம் சிக்கிக்கொள்ள மகனின் தவிப்பை அறிந்த துவிச்சக்கரவண்டியின் சொந்தக்காரர் மன்னிப்பு வழங்குவதாகவும் கதை அமைகிறது. தந்தை மகனிடம் கூனிக்குறுகிநிற்கும் நிலை வெளிக்காட்டப்படுகிறது.

திரைப்படத்தின் பிரதான கதாபாத்திரமாக அன்டோனியோ ரிச்சி என்ற கதாபாத்திரம் விளங்குகின்றது. திரைப்படத்தின் Antogonist ஆக பேராசை இடம்பெறுகின்றது. திரைப்படம் முழுவதும் பிரதான கதாபாத்திரத்தோடு பயணிப்பதால் மகன் பாத்திரமான புருனோ ரிச்சி பாத்திரமானது Buddy கதாபாத்திரமாக அமைகின்றது. இவற்றோடு supporting actors ஆக maria, Baiocco, Alfredo, Giulio, Chiari அதனோடு police, Richi போன்ற பல்வேறு கதாபாத்திரங்கள் காணப்படுகின்றன. இத்திரைப்படமானது black and white இல் தயாரிக்கப்பட்டுள்ளது. Camera பெரும்பாலும் two shot இல் இடம்பெற்றுள்ளது. கணவன் மனைவி உரையாடல், தந்தை மகன் உரையாடல் போன்றவற்றில் காணலாம். High angle, medium shot உணர்வுகளை வெளிப்படுத்த closeup shot போன்றனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. தந்தை மகனின் நெருக்கமான உறவு காண்பிக்கப்பட்டுள்ளன. உணர்வுகள் தத்ரூபமாகக் காண்பிக்கப்பட்டுள்ளன. இங்கு plot one துவிச்சக்கரவண்டி காணாமல் போவதும் plot two மகனோடு சேர்ந்து தேட ஆரம்பிப்பதும் plot three திருடிய துவிச்சக்கரவண்டியோடு பிரதான பாத்திரம் பிடிபடுவதுமாக அமைகின்றது.

திரைப்பட background music melody ஆகவும் சில இடங்களில் மாத்திரம் ஆக்குரோசமாகவும் இடம்பெற்றுள்ளது. திரைப்படத்தின் buddy கதாபாத்திரம் ஒரு துடிப்பானதாகக் காணப்படுகின்றது. பிரதான கதாபாத்திரம் மிகவும் சோகம் நிறைந்ததாகக் காணப்படுகின்றது. அழுகை, துக்கம், குற்ற உணர்ச்சி போன்றவை மிக துல்லியமாகக் காணப்படுகிறது. நடிப்பு என்பத்தைத்தாண்டி இயல்பு நிலை என்ற எண்ணம் பார்ப்பவர்களுக்கு இடம்பெறுகின்றது.

படத்தின் இறுதிக்காட்சிகள் dialogue எதுவுமின்றி visual காட்சியினூடாக முடிகின்றது. இத்திரைப்படத்தில் Melodrama வகைக்குரிய காட்சிகள் இடம்பெற்றாலும் flim noir வகைக்குள் உள்ளடக்கப்படுகின்றது. திரைப்படம் பார்ப்பவர்களுக்கு ஏக்கம் ஒன்றைத் தருவதாகக் காட்சிகள் இடம்பெற்றுள்ளதோடு திரைப்படம் close ending ஆக முடிவடைகின்றது.

# சுற்றுலா மற்றும் அமைதி



பெரியசாமிப்பிள்ளை
செல்வராஜ்
முன்னாள் ராஜதந்திரி

உலகின் மிக முக்கியமான பொருளாதார துறைகளில் ஒன்று சுற்றுலாத் துறை ஆகும். சுற்றுலாவின் மூலம் சர்வதேச நாடுகளின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை அறிந்து கொள்வதோடு, அந்நாடு சம்பந்தமான ஒரு புரிந்துணர்வும் ஏற்படுகின்றது. பொருளாதார அபிவிருத்தி, சர்வதேச புரிந்துணர்வு, மக்களுக்கிடையிலா தொடர்பு, நாடுகளுக்கு இடையிலான சமாதானம், மொழி ஆகிவற்றை மேம்படுத்தவும் இந்த சுற்றுலாத் துறை உதவுகின்றது.

வருடம் தோறும் உழைத்துக் கொண்டிருக்கும் மனிதனுக்கு ஓய்வு, மன அமைதி, புத்துணர்வு, புத்தாக்கம், மகிழ்ச்சி, குடும்ப அன்னியோன்னியம், சிறந்த நட்புகளை வளர்த்தெடுப்பது அவசியமாக உள்ளது.

மன அழுத்தம், தீராத நோய், பிரச்சினைகளிலேயே வாழ்ந்து கொண்டிருக்கும் நிலை, சோகம், சோம்பேறித்தனம், ஆகியவற்றில் இருந்து விடுபடுவதற்கான ஒரு மார்க்கமாக இன்று சுற்றுலா அமைந்துள்ளது. இதனாலேயே ஒவ்வொருவரும் தமது ஓய்வினைக் கழிப்பதற்காக உள்ளூர்களிலும், வெளியூர்களிலும் சுற்றுலா செல்வதனை வழமையாகக் கொண்டுள்ளனர்.

இன்று உலக நாடுகள் பலவும் தத்தமது வருமானத்தினை அதிகரித்துக் கொள்வதற்காகச் சுற்றுலாத் துறையினை பெருமளவு நம்பி உள்ளன.

உலக சுற்றுலா அமைப்பின் தரவுகளின்படி, 2023 ஆம் ஆண்டு உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில், பயணம் மற்றும் சுற்றுலாவின் பங்களிப்பு சுமார் 1.6 டிரில்லியன் அமெரிக்க டாலர்களாகும். இது உலக மொத்த தேசிய உற்பத்தியில் மூன்று சதவீதமாகும்.

சுற்றுலாத் துறையில் இன்று மருத்துவ சுற்றுலா, கல்விச் சுற்றுலா, கலாசார சுற்றுலா, சுற்றுச் சூழல் சுற்றுலா, பாரம்பரிய சுற்றுலா, தொழில் சார் சுற்றுலா, என பல வகைகள் உண்டு. சுற்றுலாத் துறை வளர்ச்சி அடைவதன் மூலமாக ஒரு நாட்டில் உள்ள பல்வேறு பிரிவினர் பயனடைகின்றனர்.

விமானச் சேவைகள் தொட்டு போக்குவரத்துத் துறை, ஹோட்டல் துறை, வரவேற்பு துறை, தங்குமிட வசதிகள் செய்து கொடுப்பவர்கள், உணவுத் துறை, சுற்றுலாத் துறை வழிகாட்டிகள், வணிக விற்பனை நிலையங்கள், போன்ற துறைகளில் கடமையாற்றும் பல்வேறுபட்ட நபர்கள் தத்தமது பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்ள இத்துறை உறுதுணையாக உள்ளது.

உலகில் உள்ள பத்து பேரில் ஒருவர் இன்று சுற்றுலா சார்ந்த துறைகளில் பணி புரிகின்றார்கள் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. உலகப் பொருளாதாரத்தில் சுற்றுலாத் துறையின் பங்களிப்பு இன்று முக்கிய இடத்தை பெற்றுள்ளது

உலகத்திலுள்ள பல கோடி மக்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்குவதும் சுற்றுலாத் துறை தான். உலக சுற்றுலா அமைப்பு (UNWTO) 1979இல் உலக சுற்றுலா தினத்தை கடைப்பிடிக்கத் தொடங்கியது. அதற்கான கொண்டாட்டங்கள் அதிகாரப்பூர்வமாக 1980இல் தொடங்கியது.

அன்றிலிருந்து ஐக்கிய நாடுகள் சபையின் உலக சுற்றுலா அமைப்பினால் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதம் 27ஆம் திகதி 'உலக சுற்றுலா தினம்' அனுசரிக்கப்படுகிறது.

இத்தினத்துக்கான இந்த ஆண்டின் கருப்பொருள் 'சுற்றுலா மற்றும் அமைதி' (Tourism and Peace) என்பதாகும் நாடுகளுக்கு இடையில் அமைதியை ஊக்குவிப்பதில் சுற்றுலாவின் பங்கு முக்கியமானது ஆகும். சுற்றுலா மேற்கொள்வதன் மூலம், பல்வேறு கலாச்சாரங்களை, மக்களை, நாட்டின் புவியியல் அமைப்பினை அறிந்து கொள்ள வாய்ப்பு உருவாகின்றது.

முதன் முதலில் உலக சுற்றுலா தினம் 1980இல் கொண்டாடப்பட்டது.

1997 ஒக்டோபர் மாதம் துருக்கியில் நடந்த உலக சுற்றுலா அமைப்பின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி, ஒவ்வொரு ஆண்டும், ஒவ்வொரு நாடு இந்நிகழ்வை நடத்த வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

அந்த வகையில், இந்த நிகழ்வானது இந்த ஆண்டு ஜோர்ஜியா நாட்டில் நடைபெற உள்ளது. கடந்த வருடங்களில் எம் நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி, கொரோனா தாக்கம், போன்றவைகளின் காரணமாக உள்நாட்டு வர்த்தகங்கள் மாத்திரமல்லாமல், சுற்றுலாத்துறையும் வீழ்ச்சியடைந்து இருந்தது. அந்நிய செலாவணியினை ஈட்டிக் கொடுக்கும் மூன்றாவது தரத்தில் இலங்கை சுற்றுலாத்துறை காணப்படுகின்றது.

2024ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31ஆம் திகதி வரை 1,1,98,059 உல்லாச பிரயாணிகள் இலங்கைக்கு வந்துள்ளதாக ஸ்ரீலங்கா சுற்றுலா அபிவிருத்தி சபையானது குறிப்பிட்டுள்ளது. 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது இது 56 சதவீதமாக அதிகரித்துள்ளது. இந்த வருட இறுதியில் சுமார் 2.3 மில்லியன் உல்லாசப் பிரயாணிகள் இலங்கைக்கு வருவார்களெனவும், இதன் மூலம் சுமார் நாலு பில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாக ஈட்ட முடியுமெனவும் எதிர்வு கூறப்படுகின்றது.

உலகப் பொருளாதார பேரவை 'பயணம் மற்றும் சுற்றுலா மேம்பாட்டுக் குறியீடு 2024' என்ற தலைப்பில் உலக நாடுகளின் சுற்றுலா செயற்பாடுகளைத் தரவரிசைப்படுத்தியுள்ளது. குறித்த தரவரிசைப் பட்டியலில் இலங்கையானது 76ஆவது இடத்தை வகிக்கின்றது.

இந்தியாவின் புது டில்லியில் 2024இல் நடைபெற்ற 'சர்வதேச சுற்றுலா விருதுகள் 2024' வைபவத்தில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் (SLTPB) மதிப்புமிக்க 'சிறந்த சர்வதேச சுற்றுலா சபை' என்னும் விருதினைப் பெற்றமையானது பெருமைக்குரிய விடயமாகும்.

இலங்கையின் உல்லாசப் பிரயாணக் கைத்தொழிலை ஊக்குவிப்பதற்கு வெளிநாடுகளில் இருக்கின்ற எமது தூதரகங்களின் பங்களிப்பு இன்றியமையாதது.

பாரம்பரிய தூதுவராலய கடமைகளிற்கு மேலதிகமாக இன்றைய தூதரகங்கள், நாடுகளின் அபிவிருத்தி, பொருளாதார வளர்ச்சி, முதலீட்டு ஊக்குவிப்புக்கள், மக்கள்-மக்கள்-தொடர்பு, உல்லாசப் பிரயாணக் கைத்தொழில், காலநிலை மாற்றம், போன்ற பல விடயங்களை மேம்படுத்துவதில் அதிக அக்கறை செலுத்தி வருவதனை நாம் நோக்க முடியும்.

இதுபோல, சர்வதேச மட்டத்தில் நடைபெறுகின்ற உல்லாச பிரயாணக் கைத் தொழில் தொடர்பான கண்காட்சிகளிலும், கலந்துரையாடல்களிலும், எமது நாடு தொடர்ச்சியாகப் பங்கு பற்றி, அதன் மூலம் எமது நாட்டின் உல்லாசப் பிரயாணக் கைத்தொழிலை ஊக்குவிக்கின்றது.

சர்வதேச ரீதியாக எமது நாட்டுக்கு எதிராக, பாதகமான பிரயாண அறிவுறுத்தல்களை ஏனைய நாடுகள் அறிவிக்கின்ற பொழுது, எமது தூதரகங்கள் அதற்கு எதிராக அந்நாட்டு அரசுகளுடன் கதைத்து அதனைச் சாதகமாக மாற்றிய நிகழ்வுகளையும் பாராட்டாமல் இருக்க முடியாது.

சில நாடுகளுக்கு இடையிலான நேரடி விமானச் சேவையினை மேம்படுத்துவதன் மூலம் அதிகளவிலான உல்லாசப் பிரயாணிகளைக் கவர்ந்திழுக்க முடியும்.

மேற் கூறப்பட்ட காரணங்களின் மூலமாகத் தான் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும். உல்லாச பிரயாணிகளின் பாதுகாப்பு, அவர்களது சுகாதாரம் ஆகியன இன்றியமையாதது.

அவைகள் உறுதிப்படுத்தப் படுகின்ற பொழுது உல்லாசப் பிரயாணிகளின் வருகையானது இன்னும் அதிகரிக்கும் என்பது ஒரு கருத்து. சுற்றுலாத் துறை சார்ந்த தொழில்களில் ஈடுபடும் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நல்வாழ்த்துக்கள்.






# புது காலண்டர்



சாந்திஜொ

“ஒண்ணு, ரெண்டு, மூணு, நாலு. ம்....நாலு...செவுத்துல ஒண்ணு தொங்குது அதோட ஐஞ்சு...

பார்த்திபன் ஹாலிலிருந்து, “பிரபா ரெடியாகிட்டியா? சீக்கிரம் வா, ஸ்கூலுக்கு லேட் ஆகுது” என்று மகனை சத்தம் போட்டார்.

அப்பாவின் குரலைக் கேட்டதும், 10 வயது பிரபா, இலவசமாக கிடைத்த இலட்சுமி, சரஸ்வதி, முருகன் இரு புறமும் வள்ளி, தெய்வானையுடன் சிரித்தாற்போல, இருந்த, புது வருட காலண்டர்களை எண்ணி அவன் உயரத்திற்கு குறைவாக உள்ள ஷெல்பில் அடுக்கி வைத்து விட்டு பேக்கை மாட்டிக் கொண்டு ஹாலுக்கு செல்கிறான்.

மருதுசாலை தெருவில், அந்த சாலை தெருவில் உயர்ந்த மரங்களை விட, உயரமாக நிமிர்ந்து நிற்கிற பெரிய வீடு தான் பார்த்திபனின் வீடு. அந்த தெரு ஜனங்கள் அந்த வீட்டை செல்லமாக பெரிய வீடு என்றும் அழைப்பதும் உண்டு.

ஜமுனாவும், பார்த்திபனின் ஆபிஸ் பைல்கள் அடங்கிய பேக்குடன் ஹாலுக்கு வருகிறாள்.

ஜமுனாவை பார்த்ததும் பார்த்திபன் “இன்னைக்கு ஈவ்னிங் பிரபாவ டியூசனுக்கு அனுப்ப வேணா, ரெடியா இருங்கா ரெண்டு பேரும். நியூ இயர் பர்சசிங் பண்ண போவோம்” என்றார்.

“ஹாய்ய்... எனக்கு ரெண்டு டிரெஸ் வேணும் அப்பா”

“சரிடா பிரபா... அப்பா வாங்கி தரேன்...”

வெளியே காரை துடைத்து கொண்டு இருந்த சண்முகம், முதலாளி பார்த்திபனை பார்த்ததும் வணக்கத்தை சொல்லி விட்டு பவ்யமாக நின்று கொண்டிருந்தான்.

“ஐயா... ஒரு சின்ன உதவி செய்யணும்”

“சொல்லு சண்முகம் என்ன வேணும்”

“ஐயா இன்னும் 3 நாள்ல புது வருசம் பொறக்கபோகுது. வீட்ல மகனுக்கு டிரெசு வாங்கணும், அடுத்த மாச சம்பளத்துல 1,500 கொடுத்த உதவிய இருக்கும்”

“இந்த பாரு சண்முகம்... நீ வேலைக்கு வந்து 8 மாசம் தான் ஆகுது. மாசம் சம்பளம் 5 தேதி தான் கொடுக்குறேன். இந்த மாசமும் கொடுத்துட்டேன். இனி அடுத்த மாசம் 5 தேதி தான் சம்பளம். புது வருசம் வருதுனு நான் ஒண்ணும் பண்ண முடியாது. போய் வேலைய பாரு” என்று சொல்லி விட்டு காரில் புறப்பட்டார்.

சண்முகம் பார்த்திபனிடம் வேலைக்கு சேர்வதற்கு முன்பு வரை விவசாயம் செய்தவர். பேங்கில் நிலத்தை அடமானம் வைத்து கடன் வாங்கி கட்ட முடியாமல் நிலத்தை பறிகொடுத்த பலரில் சண்முகமும் ஒருவர். இப்பொழுது மனைவி, மகனின் நலனை கவனிப்பதற்காக தன் மனதை கல்லாக்கி கொண்டு வேலை செய்யும் பார்த்திபனின் வேலைக்காரன்.

“ஏம்பா, சண்முகம் அங்கிள்க்கு காசு கொடுக்கல” என்று பிரபா கேட்டான்.

“பிரபா அவனுங்க இல்லாதவங்க, நம்ம இருக்குறவங்க. இருக்குற நம்ம இல்லாத அவங்க கேட்டதும் உடனே கொடுத்தோம்னா, நம்ம மதிப்பு தெரியாம போய்ரும். நமக்கும் மரியாத இல்லாம போய்ரும். கொஞ்சம் அலைய விடணுடா அவங்கள. அப்போ தான் அவங்க நம்ம காலையே சுத்திட்டு வருவாங்க”

> “இந்த பாரு சண்முகம்... நீ வேலைக்கு வந்து 8 மாசம் தான் ஆகுது. மாசம் சம்பளம் 5 தேதி தான் கொடுக்குறேன். இந்த மாசமும் கொடுத்துட்டேன். இனி அடுத்த மாசம் 5 தேதி தான் சம்பளம். புது வருசம் வருதுனு நான் ஒண்ணும் பண்ண முடியாது. போய் வேலைய பாரு” என்று சொல்லி விட்டு காரில் புறப்பட்டார்

“அதுதாம்பா நீ அன்னைக்கு சொன்னது போல, கிளாஸ்ல நான் யாருக்கும் பென்சில் கடன் கேட்டாலும் கொடுக்குறதில்ல”

“நம்மள மாதிரி காசு வச்சு இருக்க பசங்க கேட்ட கொடு. வேற யாருக்கும் கொடுக்காத” என்று தன் குணத்தை மகனுக்கு வாரி இறைத்தார் பார்த்திபன்”

மருது சாலை மற்றும் அதனை சுற்றியுள்ள வீடுகளில் உள்ள பிள்ளைகள் பெரும்பாலும் மருது சாலையில் உள்ள வித்யா டீச்சரிடம் தான் டீயூசனுக்கு வருகிறார்கள். வித்யா டீச்சர் வட்டமான முகமும் ஒல்லியாக சிவப்பாக இருப்பவர். பிறக்கும்போதே இடது கால் செயல் இல்லாததால் அவர் உயரத்திற்கு ஏற்றவாறு தடி ஒன்றை ஊனி நடப்பவர்.

பிரபாவும் பள்ளி முடிந்து மாலையில் அங்கு தான் டியூசன் போவான்.

அதே டியூசனில் படிக்கும் ரங்கா, அன்று அவன் வீட்டு பக்கத்தில் உள்ள மளிகை கடையில் அண்ணாச்சி தனக்கு கொடுத்த காலண்டரை டியூசனுக்கு கொண்டு சென்றான்.

“உண்மை உழைப்பு உயர்வு, அண்ணாச்சி மளிகை கடை” என்ற வாசகத்துடன், கலைநயமான முகமும் தலையில் பொன் நிற கிரீடத்துடன் நான்கு கைகளில் இரு கைகள் சிறிய தாமரை மலரை தாங்கியபடியும் மற்ற இரு கைகளான வலது கையில் பொற்காசுகள் விழுவதும் இடது கையில் பொன் கூடத்தை வைத்து இருப்பதுமான தாமரை மலரில் அமர்ந்தப்படி, லட்சுமி கடவுள் காட்சி அளிப்பதுமாக இருந்த அந்த காலண்டரை பார்க்கும் போது, நமக்கே கை எடுத்து கூம்பிட தோணும்.

ரங்காவின் அந்த காலண்டரை மற்ற பிள்ளைகள் வாயை திறந்து ஆச்சரியத்துடன் பார்த்து ரசித்தார்கள்.

பின்புறம் இரண்டு வரிசை தள்ளி அமர்ந்திருந்த பிரபாவும் சீனுவும் ரங்காவின் காலண்டரை பார்க்க முன் சென்றார்கள்.

“உங்கிட்ட எத்தன காலண்டர் இருக்கு ரங்கா” என்று பிரபா கேட்டான்.

“ஒண்ணு தான் பிரபா”

“எங்க வீட்ல ஆறு காலண்டர் இருக்கு தெரியுமா. நேத்து நான் நியூ ஈயர் டிரெஸ் வாங்க போன கடையிலும் காலண்டர் ஒண்ணு கிடைச்சிச்சி” என பிரபா சொல்ல சீனுவும் “தெரியுமா!” என்ற பாணியில் நக்கல் செய்தான்.

“எனக்கு ஒண்ணு தறியா” என்று சர்மி கேட்டாள்.

“நான் யாருக்கும் கொடுக்க மாட்டேன” என பிரபா சொல்லி விட்டு தன்னுடைய இடத்திற்கு சென்று அமர்ந்தான்.

சிறிது நேரத்தில் உள்ளே வந்த வித்யா டீச்சர் பாடத்தை ஆரம்பிக்க தொடங்கினார்.

“பிள்ளைகளா இன்னையில இருந்து ஸ்கூல் ஹோம்வொர்க் மட்டும் செய்து முடிச்சிட்டு போறது இல்லாம ஒவ்வொரு நாளும் ஒரு திருக்குறள் தெரிஞ்சிக்க போறீங்க.

> ஏந்த எதிர்பார்ப்பும் இல்லாம மத்தவங்த நமக்கு செய்ற உதவி இருக்குதானே, அது கடல விட பெரிசுனு வள்ளுவர் ல்றாரு... பசங்களா, மத்தவங்களுக்கு நீங்க உதவி செஞ்ச கடவுள் உங்களுக்கு என்ன வேணுமோ அத குடுப்பாரு. மறக்காதீங்க சரியா...”

சரி இன்னைக்கு நாம என்ன திருக்குறள் பார்க்க போறோம்னா அதிகாரம் - 11 செய்நன்றி அறிதல்

“மத்தவங்க நமக்கு கொடுக்குற கஷ்டத்த விட, அவங்க நமக்கு செஞ்ச உதவிய தான் நினைச்சு பாக்கணும். மத்தவங்க செஞ்ச உதவிய மறந்தவங்க வாழ்க்கைல உயர முடியாது”

“பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது”

“இந்த குறளுக்கு அர்த்தம் என்ன தெரியுமா? சொல்றேன் கேளுங்க... எந்த எதிர்பார்ப்பும் இல்லாம மத்தவங்த நமக்கு செய்ற உதவி இருக்குதானே, அது கடல விட பெரிசுனு வள்ளுவர் சொல்றாரு... பசங்களா, மத்தவங்களுக்கு நீங்க உதவி செஞ்ச கடவுள் உங்களுக்கு என்ன வேணுமோ அத குடுப்பாரு. மறக்காதீங்க சரியா...”

டியூசன் முடிந்து வீட்டிற்கு கிளம்பும் முன் ரங்கா தன் கொண்டு வந்த காலண்டரை வித்யா டீச்சரிடம் காட்டுகிறான். மற்ற பிள்ளைகளும் அதை பார்க்க ஆசைப்படுகிறார்கள்.

“ஆ... அழகா இருக்குடா... பாக்கும் போதே கும்பிடணும் போல இருக்கு... யாரு குடுத்த ரங்கா...”

“எங்க வீட்டு பக்கத்துல இருக்க, அண்ணாச்சி கடை, அண்ணாச்சி குடுத்தாறு டீச்சர்...”

“எங்க வீட்ல 6 காலண்டர் இருக்கு டீச்சர் இது மாதிரி” என்று பிரபா சொன்னான்.

“அப்படியா...”

“டீச்சர் உங்களுக்கு காலண்டர் பிடிச்சி இருக்கா...” என்று ரங்கா கேட்டான்.

“ஆமான்டா நல்லாருக்கு...”

“அப்போ நீங்களே வைச்சுக்கோங்க டீச்சர்...” என்று ரங்கா சொன்னதும் பிரபா, சீனு உட்பட மற்ற பிள்ளைகளும் வியப்போடு ரங்காவை பார்க்கிறார்கள்.

“வேணா ரங்கா... நீ வீட்டுக்கு கொண்டு போ எனக்கு கிடைக்கும்...”

“பரவால டீச்சர் உங்களுக்கு பிடிச்சி இருக்குதுதானே... நீங்களே வெச்சுக்கோங்க...”

“ஏன்டா உனக்கு பிடிக்கலையா...?” என்று வித்யா டீச்சர் கேட்கிறார்.

“ரொம்ப பிடிச்சிருக்கு டீச்சர்... ஆனா இப்ப நீங்க சொல்லி கொடுத்தீங்க தானே வள்ளுவர் சொல்லிருக்குறாரு நம்ம செய்ற உதவி கடல விட பெரிசு, மத்தவங்களுக்கு நம்ம உதவி செஞ்ச கடவுள் நமக்கு வேணும்குறத கொடுப்பாருனு, அத டீச்சர் உங்கள வைச்சுக்க சொன்னேன்...”

ரங்கா சொன்னதை கேட்டு மற்ற பிள்ளைகளோடு வித்யா டீச்சரும் கைதட்டினார்.

மறுநாள் பிரபா தன்னிடம் இருந்த காலண்டர்களை ரங்காவுக்கும் மற்ற பிள்ளைகளுக்கும் கொடுத்தான். அவர்கள் வீட்டிலும் லட்சுமி சிரித்தபடி இருந்தாள். தன் அப்பாவின் குணத்தையும் மாற்றுவான் என்பதில் எனக்கு சந்தேகமில்லை.

# இன்று வைர விழா

## 36 வருட கல்விச் சேவையிலிருந்து ஓய்வு



உதவிக் கல்விப் பணிப்பாளரும் பிரபல ஊடகவியலாளருமான தேசமான்ய வித்தகர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா, வெள்ளிக்கிழமை (27) வைரவிழா அகவையில் கால் பதிக்கிறார்.

36 வருட கால கல்விச் சேவையிலிருந்து சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா வெள்ளிக்கிழமை (27) தனது அறுபதாவது வயதில் அரச சேவையில் ஓய்வு பெற்றார்.

இவரது 60 வது அகவை பிறந்த நாளான சனிக்கிழமை (28) பாசிக்குடா அமயா விடுதியில் அவர் சார்ந்த மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையின் 1991/92 புலன அணியினர் மணிவிழாக் கொண்டாட்டத்தைப் பொன்.நடராஜா தலைமையில் முன்னெடுக்கின்றனர்.

சம்மாந்துறை வலயத்தில் 26 வருடங்களாக மேலாகச் சேவையாற்றி வெள்ளி விழாக் கண்ட ஒரே ஒரு உதவிக் கல்விப் பணிப்பாளரும், சம்மாந்துறை வலய கல்வி சார் உத்தியோகத்தர்கள் நலன்புரி ஒன்றியத்தின் தலைவருமான விபுலமாமணி வித்தகர் வி.ரி.சகாதேவராஜா (ஜே.பி) காரைதீவைச் சேர்ந்தவராவார்.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் மிகவும் நெருங்கிய பற்றாளனான இவர் பத்து வருடங்கள் காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியில் ஆசிரியராகவும் சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையில் 26 வருடங்கள் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் சேவையாற்றியுள்ளார் .

பேராதனை பல்கலைக்கழக கலைத்துறை பட்டதாரியான இவர் மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையில் பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராவார். பட்டப்பின் கல்வி டிப்ளோமோ மற்றும் கல்வி முதுமாணிப் பட்டம் பெற்றவராவார். இலங்கை அதிபர் சேவையின் முதலாந்தர அதிபராவார்.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவராக அம்பாறை மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவராக காரைதீவு விபுலானந்தா ஞாபகார்த்த பணிமன்றத் தலைவராக இந்துசமய விருத்திச்சங்க தலைவராக காரைதீவு விளையாட்டு கழகத் தலைவராக கம்பன் கலைக்கழகத் தலைவராக கிராம அபிவிருத்தி சங்க தலைவராக இவ்வாறு பல அமைப்புகளில் தலைவராக முன்னணி சமூக செயற்பாட்டாளரான அவர் ஒரு தலைசிறந்த ஊடகவியலாளரும் கூட.

சம காலத்தில் மேற்குறிப்பிட்ட அமைப்புகளின் ஆலோசகராக மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலய பரிபாலன சபையின் ஆலோசகராக இவ்வாறு பல நடிபங்குகளினூடாக சமூக சமய சேவையாற்றி வருகிறார்.

காரைதீவின் பழம் பெரும் ஆசிரியர் வே.தம்பிராஜா தங்கநாயகம் தம்பதிகளின் கனிஸ்ட புதல்வராவார். காரைதீவில் 1964.09.28 அன்று பிறந்தார்.


ஆரம்பக் கல்வியை ராமகிருஷ்ணசங்க ஆண்கள் பாடசாலையிலும் பின்னர் விபுலானந்த மத்திய கல்லூரியிலும் மற்றும் மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்திலும் கல்வி பயின்றார்.

‘ஊழியின் ஆழி’ எனும் வரலாற்று நூலை 2005 வெளியிட்டார். மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலையில் முத்தமிழ் மன்ற தலைவராக பணியாற்றிய வேளை அங்கு ‘கலைச்செல்வி’ நூலுக்கு நூலாசிரியராகவும் சுவாமி விபுலானந்த பணிமன்றத்தின் அடிகளார் நினைவாலய மலருக்கும் சுவாமி நடராஜானந்தா ஜீயின் நூற்றாண்டு விழாவில் சேவையின் சிகரம் எனும் நூலையும் ஊரா வெளியிட்டிருக்கின்றார்.

இலங்கையின் அதிசிறந்த ஊடக விருதான மக்கள் சேவை ஊடக விருது 2007 வீரகேசரி கட்டுரை வெளியீட்டுக்காக பெற்றார்.

இத்தாலி, பாங்க்கொக், மலேசியா, சிங்கப்பூர் மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகளுக்கு சென்று சிறப்பு அனுபவத்தை பெற்றிருந்தார்.

தேசமான்ய வித்தகர் திகாமடுல்ல அபிமானி விபுலமாமணி வாழ்நாள் சாதனையாளர் வித்யசாஹித்யன் வித்யகலாசிறி கலைச்செம்மல் போன்ற இன்னோரன்ன விருதுகளைப் பெற்றவர். அவர் மேலும் ஆன்மீக சொற்பொழிவு மற்றும் பிரசங்கங்களில் ஈடுபட்டு வருகிறார்.



ஜெருசலேம்

## லெபனான் மீது இஸ்ரேல்
# தரைவழித் தாக்குதல்

லெபனானில் தரைவழித் தாக்குதலைத் தொடங்கும்படி, படையினருக்கு இஸ்ரேல் இராணுவ தலைவர் ஹலேவி உத்தரவிட்டுள்ளார்.

இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பினர் கடந்த ஆண்டு தாக்குதல் நடத்தினர். ஹமாஸுக்கு ஆதரவாக, இஸ்ரேலின் அண்டை நாடான லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பினரும் அவ்வப்போது தாக்குதலில் ஈடுபடுகின்றனர்.

இதற்கு முடிவு கட்ட இஸ்ரேல், ஹிஸ்புல்லா அமைப்பினர் மீது நேரடி தாக்குதலில் இறங்கியது.

உளவு அமைப்பினர் உதவியுடன் பேஜர்கள் வோக்கிடாக்கிகளை வெடிக்க செய்தது. தொடர்ந்து, லெபனான் நாட்டில் பதுங்கியுள்ள ஹிஸ்புல்லா படையினர் மீது கடந்த 24ஆம் திகதி முதல் வான் தாக்குதலையும் இஸ்ரேல் இராணுவம் ஆரம்பித்துள்ளது.

மூன்று நாட்களாக நடக்கும் இந்த தாக்குதலில் இதுவரை 585 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்நிலையில், லெபனானில் தரைவழித் தாக்குதலைத் தயார்படுத்துமாறு படையினருக்கு இஸ்ரேல் இராணுவ தலைவர் ஹலேவி உத்தரவிட்டுள்ளார்.

மேலும், "லெபனானில் தரைத் தாக்குதலுக்கு நாடு தயாராகி வருகிறது. ஈரானுடன் இணைந்து ஹிஸ்புல்லா அமைப்பினர் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தினர். இதற்கு அவர்களுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும்" என்று அவர் தெரிவித்துள்ளார்.



ஒட்டாவா

## நம்பிக்கை வாக்கெடுப்பில்
# கனடா பிரதமருக்கு வெற்றி

கனடா பாராளுமன்றத்தில் நடந்த வாக்கெடுப்பில், ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான அரசு வெற்றி பெற்றுள்ளது.

கனடாவில் ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான, சிறுபான்மை லிபரல் கட்சியின் ஆட்சி நடக்கிறது. இங்கு ஜக்மீத் சிங் தலைமையில் புதிய ஜனநாயகக் கட்சி செயல்படுகிறது. இந்த கட்சிக்கு 24 எம்.பிக்கள் உள்ளனர்.

இவ்வளவு காலமாக ட்ரூடோவுக்கு ஆதரவு தெரிவித்து வந்த இக்கட்சி, சமீபத்தில் ட்ரூடோ தலைமையிலான அரசுக்கு அளித்து வந்த ஆதரவை வாபஸ் பெற்றதாக அறிவித்தது. இதனால் ட்ரூடோ எதிர்பாராத அடியைச் சந்தித்துள்ளார்.

இந்நிலையில், கனடா பாராளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடந்தது. நம்பிக்கை தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு 338 பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையினரின் ஆதரவு தேவை. இதன்போது, ட்ரூடோ தலைமையிலான அரசுக்கு, அவரது கட்சி எம்.பி.,க்கள் 154 பேர் மற்றும் கன்சர்வேட்டிவ் கட்சி எம்.பிக்கள் உட்பட 211 பேர் ஆதரவாக வாக்களித்தனர். இதில் ஆதரவை வாபஸ் பெற்ற புதிய ஜனநாயக கட்சியை சேர்ந்த எம்.பி.,க்களும் அடங்குவர். 120 பேர் மட்டும் எதிராக வாக்களித்தனர். இதனால் நம்பிக்கை வாக்கெடுப்பில் ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான அரசு வெற்றி பெற்றது.




கலிபோர்னியா

# அமெரிக்க ஆலயத்தில் மீண்டும் அத்துமீறல்

நியூயோர்க் சுவாமி நாராயண் கோவிலை விஷமிகள் சேதப்படுத்தி 10 நாட்கள் ஆன நிலையில், கலிபோர்னியாவில் உள்ள சுவாமி நாராயண் கோவிலுக்குள் அத்துமீறி நுழைந்த விஷமிகள், 'இந்துக்களே திரும்பி போங்கள்' என்ற வாசகத்தை எழுதி வைத்துள்ளனர்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் பி.ஏ.பி.எஸ். எனப்படும் 'போச்சசன்வாசி அக்ஷர் புருஷோத்தம்' என்ற அமைப்பு கட்டியுள்ள சுவாமி நாராயண் கோவில் மெல்வெல்லியில் உள்ளது. கடந்த 17ஆம் திகதி இக்கோவில் மர்ம நபர்களால் சேதப்படுத்தப்பட்டது.

இந்நிலையில், கலிபோர்னியாவில் உள்ள பி.ஏ.பி.எஸ். சுவாமி நாராயண் கோவிலுக்குள் நேற்று முன்தினம் (25) இரவு அத்துமீறி நுழைந்த விஷமிகள், 'இந்துக்களே திரும்பி போங்கள்" என்ற வாசகத்தை எழுதி வைத்ததுடன், அங்கிருந்த குடிநீர் குழாயையும் சேதப்படுத்தி உள்ளனர்.

இதற்கு பி.ஏ.பி.எஸ். அமைப்பு அதிருப்தி தெரிவித்துள்ளது. வெறுப்புக்கு எதிராக, ஒற்றுமையாக இருந்து அமைதிக்காக பிரார்த்தனை செய்வதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.



## நியூசிலாந்துக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்
# முன்னிலையில் இலங்கை

நியூசிலாந்துக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் முன்னிலையில் இலங்கை காணப்படுகின்றது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில், இலங்கை வென்ற நிலையில், காலியில் வியாழக்கிழமை (26) ஆரம்பமான இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கையணியின் தலைவர் தனஞ்சய டி சில்வா தமதணி முதலில் துடுப்பெடுத்தாடுமென அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை முதலாவது ஓவரிலேயே பதும் நிஸங்கவை அணித்தலைவர் டிம் சௌதியிடம் இழந்தது.

பின்னர் ஜோடி சேர்ந்த திமுத் கருணாரத்னவும், தினேஷ் சந்திமாலும் இனிங்ஸைக் கட்டியெழுப்பிய நிலையில் 46 ஓட்டங்களுடன் கருணாரத்ன ரண் அவுட்டானார்.

இதன் பின்னர், சந்திமாலும், அஞ்சலோ மத்தியூஸும் இனிங்ஸை நகர்த்திய நிலையில், 116 ஓட்டங்களுடன் கிளென் பிலிப்ஸிடம் சந்திமால் வீழ்ந்தார். தொடர்ந்து மத்தியூஸும், கமிந்து மெண்டிஸும் ஓட்டங்களைப் பெற்ற நிலையில் முதலாம் நாள் ஆட்ட முடிவில் 3 விக்கெட்டுகளை இழந்து 306 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் மத்தியூஸ் 78 ஓட்டங்களுடனும், கமிந்து 51 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமலுள்ளனர்.



## மட்டக்களப்பு இந்து கல்லூரிக்கு
# கிரிக்கெட் உபகரணங்கள் கையளிப்பு

■ அஸ்ஹர் இப்றாஹீம்

மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் கடினபந்து கிரிக்கெட்டை மேலும் வலுவூட்டும் வகையில் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தால் கடி பந்து கிரிக்கெட் உபகரணங்கள் அண்மையில் கையளிக்கப்பட்டது.



## அமிர்தகழி ஸ்ரீ சித்தி விநாயகர் மகா வித்தியாலயத்தின்
# மாணவிகள் பிரகாசிப்பு

■ அஸ்ஹர் இப்றாஹீம்

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டிகளானவை மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றபோது மட்டக்களப்பு, அமிர்தகழி ஸ்ரீ சித்தி விநாயகர் மகா வித்தியாலய மாணவிகள் பிரகாசித்திருந்தனர்.

வித்தியாலயத்தின் றொபேக்கா 16 வயதுக்குட்பட்ட 100 மீற்றர், 200 மீற்றர், 110 மீற்றர் தடைதாண்டல் போட்டிகளிலும், நகுலேஸ்வரன் டாரிகா 18 வயதுக்குட்பட்ட குண்டு போடுதலுடன், தட்டெறிதல் போட்டியில் 27.54 மீற்றர் தூரம் எறிந்து புதிய கிழக்கு மாகாண சாதனையுடனும் தேசியமட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் வித்தியாலயத்தின் கபடி அணியும் வெற்றியீட்டி தேசிய மட்டப் போட்டிகளுக்கு தெரிவாகி பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

வெற்றியீட்டிய மாணவர்களுக்கும், வெற்றிக்கு பங்களிப்பு வழங்கிய விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களான நிக்கோல் நிசாந்தன், திருமதி. பிரதீஸ்கரன் நிரஞ்சலா, உடற்கல்வி ஆசிரியர் செல்வி.க. லதா ஆகியோருக்கு பாடசாலை அதிபர் வல்லிபுரம் முருகதாஸ் உள்ளிட்ட கல்வி சமூகம் வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துள்ளனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 27, செப்டெம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.